Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-14 27-03-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 37


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-11455)

# சுனாமி நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த

# புலிகள்-அரசுஇணைந்த கட்டமைப்பு அவசியம்


## ஐரோப்பிய பாராளு. பிரதிநிதிகள் வலியுறுத்து

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாணப் பணிகள் மந்தகதியிலேயே இடம் பெறுகின்றது. இதனைத் துரிதமாக ஆரம்பிக்க அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே இணைந்த கட்டமைப்பொன்று அவசியமென இலங்கை வருகை தந்திருந்த ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் வலியுறுத்தியுள்ளது.**

தமது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல முன்னரே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். மேலும் தெரிவிக்கையில், தேவையான நிதியுதவிகள் கிடைத்துள்ள போதிலும் அத்தியாவசிய புனர்நிர்மாணம் தாமதமடைந்துள்ளமை குறித்து ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவின் தலைவர் நீனாகில் கவலையடைந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ தொலைக்காட்சி சேவை ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பம்




தமிழீழ தொலைக்காட்சி சேவை நேற்று ஐரோப்பிய நாடுகளில் தனது சேவையை ஆரம்பித்தது. ஐரோப்பாவில் ரிரிஎன் தொலைக்காட்சியூடாக நேற்று இரவு தாயக நேரம் 11.30 மணிக்கு இத்தொலைக்காட்சி சேவை ஆரம்பமாகியது.

தமிழீழ தாயகத்தின் தேசியக்குரலை வெளிப்படுத்துகிற ஒளி ஊடகமாக தாயகத்திலிருந்து தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி தன் சேவைவையை 30 நிமிடங்களுக்கு வழங்குகிறது. இதில் முதன்மையாக செய்திப்பகுதி இடம் பெறுமென தமிழீழ தேசிய தொலைக்காட்சி இயக்குநர் தெரிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் புலனாய்வுத்துறையினரே கிழக்கில் படுகொலைகளைச் செய்கின்றனர்

### அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் குயிலின்பன்

கிழக்கு மாகாணத்தில் கருணா தரப்பு என்று கூறிக்கொண்டு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினரே படுகொலைகளைச் செய்து வருவதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் நேற்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் நடைபெற்ற சந்திப்பில் விளக்கிக் கூறியுள்ளார்.

கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர் வில்லியா அம் பாறை மாவட்டத்திற்கு மேற் கொண்ட விஜயத்தின்போது தம்பிலுவிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட செயலகத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின் பனைச் சந்தித்தார். இச்சந்திப்பில் கிழக்கில் தொடரும் படுகொலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை மாவட்டத்தில்

## மாவீரர் குடும்பங்களுக்கு ஊக்குவிப்புப் பயிற்சித்திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில் மாவீரர் குடும்பங்களிற்கு ஊக்குவிப்புப் படித்திட்டம் மேற்கொள்வதற்கான ஆரம்ப சந்திப்பு நேற்று சம்பூர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் சி.குபேரன் தலைமையில் நேற்றுப் பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற மேற்படி சந்திப்பில் திருமலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலவச கணனிப் பயிற்சி நிலையம் உடுத்துறை ம.வி.யில் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

பிரான்ஸ் நாட்டில் இயங்கிவரும் தென்றல் அசோசியேட்ஸ் அமைப்பின் உதவியுடன் வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலவச கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று உடுத்துறை மகாவித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10. 30 மணிக்கு வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் வடமராட்சி கிழக்கு பட்டப் படிப்புகள் மாணவர் ஒன்றியத் தலைவர் சசிதரன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில், மங்கல விளக்கினை பாடசாலை அதிபர் அரியகுமார், மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர்கள் மைக்கல் அஞ்சலோ, தயாநந்தன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கடற்படையின் யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)



## இத்தாவில் போரியல் வரலாற்று அரும்பொருள் காட்சி மண்டபம் நேற்றுத் திறந்து வைப்பு

ஆனையிறவுப் படைத்தள மீட்பிற்காக 26-03-2000 அன்று குடாரப்பில் தரையிறக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் படையணிகள் 34 நாட்கள் சமரில் இத்தாவில் பகுதியை மீட்டதன் ஐந்தாண்டு நினைவை முன்னிட்டு இத்தாவில் சந்தியில் அமைக்கப்பட்டபோரியல் வரலாற்று அரும்பொருள்காட்சி மண்டபம் வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் அவர்களால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வெற்றிச் சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூரும் முகமாக நேற்று இம்மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. தமிழீழ தொல்லியல் அரும்பொருள்காப்பகத்தினரால் அமைக்கப்பட்ட இந்நினைவு மண்டபமானது மேற்படி சமரில் விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல் டாங்கியினை நினைவுப் பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத் திறப்பு நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர் நினைவுப் படத்திற்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலைஅணிவிக்க, தொடர்ந்து தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொலை

கொழும்பு கொம்பனி வீதியில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது. போதைவஸ்து குற்றம் தொடர்பில் பல வருடங்களாக சிறைத் தண்டனை பெற்ற ஒருவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

முச்சக்கர வண்டியில் வந்தோரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)



## வரி விளம்பரம்


### தென்னந் தோட்டம் தேவை

A-9 வீதியில் கொடிகாமம் தொடக்கம் இயக்கச்சி வரை உள்ள பிரதேசத்தில் தென்னந்தோட்டம் அல்லது அதற்கேற்ற வெற்றுக்காணி உடனடித் தேவையாக உள்ளது. தொடர்பு அ.லோகராஜாNo130 A,பெரியார் 'குளம்,பூந்தோட்டம், வவுனியா. T.P. 0244589221 (5872)

### தவறிவிட்டது

அ. கரிகாலன் (போராளி) என்பவருடைய மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் N.P JG 7268 கையடக்க தொலைபேசி... பிரயாணப் பையுடன் 24.03.2005அன்று பி.ப 4.00 மணியளவில் புதூர்ச் சந்திக்கும் புளியங்குளம் சோதனைச் சாவடிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சி/நந்தவனம் கிளிநொச்சியில் அல்லது தொலைபேசி இல. 021-2285704யுடன் தொடர்பு கொள்ளவும். (5891)

### தவறிவிட்டது

ஜெகதீஸ்வரன் ஜெயகரன் (திருநெல்வேலி யாழ்ப்பாணம்) என்பவருடைய கடவுச்சீட்டு புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலடியில் 25.03.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எழில்நிலா ஸ்ரூடியோ இல: 67/1 விசுவமடுவில் ஒப்படைக்கவும். தொடர்பிற்கு HP 0776623799 (5892)


## டைனமைற் வைத்து மீண்டும் மீன் பிடிப்பு

(மன்னார்)


மன்னார் தீவுப்பகுதிகளில் மீண்டும் டைனமைற் வெடி மூலம் மீன்பிடித்தல் முறை அதிகரித்து வருவதாக தெரிய வருகிறது.

அண்மையில் இந் நடவடிக்கையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தாலும் மீண்டும் மீறப்படுவதாக தெரியவருகிறது.

(18)



நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியில் முல்லைத்தீவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழான தையல் பயிற்சி ஆரம்ப விழாவின் போது எடுக்கப்பட்ட படம். (படம்:- சகிலா)



ஓலுமடு கமநல சேவை நிலையம் கடந்த ஆண்டு மூன்றாம் மாதம் 25 ஆம் திகதியுடன் கட்டி முடிக்கப்பட வேண்டும். ஆனால் இது வரை இக்கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலையில் காணப்படுவதை படத்தில் காணலாம். (படம்:- கவியரசன்)

## தேசியக் கல்வியியற்கல்லூரி நுண்கலைத்துறையினரின்

# கிளிநொச்சி மாவட்ட ஓவியப்போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத் துறையினர் கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி மத்தியகல்லூரியில் நடத்திய கிளிநொச்சி மாவட்ட மட்டத்திலான ஓவியப்போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

**தரம் 4,5 பிரிவுகள்:-**

முதலாமிடம் செ.ஜேம்ஸ் கலையரசன், கிளி. தம்பிராசபுரம் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் இராசரத்தினம் சாளினி, கிளி.அ.த.க பாடசாலை, மூன்றாம் இடம் பிரதீபன் கீர்த்தனா கிளிநொச்சி மகாவித்தியாலயம்,

**"அழகெழல்"சிறப்புக்கேடயத்துக்கு உரியவர்கள்:-**

ப.நிந்தினி கிளிநொச்சி மத்திய கல்லூரி, இராசரத்தினம் தனஞ்சயன் கிளி.உருத்திரபுரம் மகாவித்தியாலயம், இராசேந்திரன் மதுஷனன் கிளிநொச்சி மகாவித்தியாலயம்,

**தரம் 6,7,8 பிரிவுகள்:-**

முதலாமிடம் நாகராசா ஜெயசிறி கிளிநொச்சி மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் கருணாகரன் ரோஜிதன் கிளி.முழங்காவில் மகாவித்தியாலயம், மூன்றாம் இடம் கஜேந்திரன் சுதர்சன் கிளிநொச்சி மத்திய கல்லூரி,

**"அழகெழல்"சிறப்புக்கேடயத்துக்கு உரியவர்கள்:-**

அனுசா தங்கராஜ் கிளி.அக்கராயன் அ.த.க பாடசாலை, சோபிதா இரவீந்திரநாதன் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், அடைக்கலன் நிஷாந்தன் கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்,

**தரம் 9,10,11 பிரிவுகள்:-**

முதலாமிடம் உதயசூரியன் அனுராஜ், பூநகரி, நல்லூர் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் எட்வின் குலராசா லக்ஸன் கிளிநொச்சி மகாவித்தியாலயம், மூன்றாம இடம் நகுலேஸ்வரன் தினோஜன் கிளி.திருவையாறு மகாவித்தியாலயம்,

**''அழகெழல்'' சிறப்புக் கிண்ணம் பெறுவோர்:-**

ஆறுமுகநாதன் லோகன் கிளி.பூநகரி மகாவித்தியாலயம், செல்வரட்ணம் சிவகணேசன் கிளி. மத்திய கல்லூரி, எஸ்.ராகுலன் கிளி.வட்டக்கச்சி மகாவித்தியாலயம்,

**உயர்தரப்பிரிவு:-**

முதலாமிடம் மரியதாஸ் விஜிதரன் கிளி.உருத்திரபுரம் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் துரைராஜசிங்கம் மோகனசிறி கிளி. பரந்தன் இந்து மகாவித்தியாலயம். மூன்றாம் இடம் வி.திலீபன் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிருஸ்ணானந்தம் ஐங்கரன் கிளி. உருத்திரபுரம் மகாவித்தியாலயம்,

**அழகெழல் சிறப்புக்கேடயத்திற்குரியவர்கள்:-**

வரதேவதாஸ் கவிதாஸ் கிளி உருத்திபுரம் மகாவித்தியாலயம், சி.சுரேஸ் கிளிநொச்சி இந்துக் கல்லூரி,

**ஆசிரியர் தரம்:-**

முதலாமிடம் திரு.நாகராஜா ஜெகதீஸ்வரன் கிளி.பூநகரி ம.வி., இரண்டாம் இடம் ஆரோக்கியநாதன் டிரோசினி, கிளிநொச்சி மத்திய கல்லாரி, மூன்றாம் இடம் துரைச்சாமி நவரட்ணஜோதி கிளி.அக்கராயன் ம.வி,

**"அழகெழல்" சிறப்புக்கேடயத்திற்குரியவர்கள்:-**

திருமதி.செ.தெய்வேந்திரமூர்த்தி கிளிநொச்சி மகாவித்தியாலயம், சரவணமுத்து சந்திரவதனி கிளி. சிவநகர் அ.த.க பாடசாலை உருத்திரபுரம், கருப்பையா கமலாதேவி கிளி.பாரதிவித்தியாலயம்

போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்குப் பணப்பரிசில்களும், வெற்றியீட்டிய அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பரிசளிப்பு விழா மே மாதம் ஏழாந் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் எனப் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

## மன்னார் திருமறை கலாமன்றம் உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன்னார் திருமறைக் கலாமன்றம் பல உதவிகளைச் செய்துவருகிறது. இதற்கமைய அண்மையில் அம்பாறை மாவட்டத்திற்கு சென்று உதவிகளை செய்த பின்னர் கடந்த புதன்கிழமை மாத்தறை மாவட்டத் திற்குச் சென்று அத்தியாவசியமான பொருட்களை கையளித்துள்ளது. அத்துடன் ஏழு குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலைக் கல்விக் கென பண உதவியும் வழங்கப்பட்டது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் திருமறைக கலா மன்றத்தின் இணைப்பாளர் மேற்கொண்டு வருகின்றார். (18)

## கலந்துரையாடல்

புதுமுறிப்புகுளத்தின் கீழ் நெற்செய்கையிலீடுபடும் விவசாயிகளுடனான அவசர கலந்துரையாடல் ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நாளைமறுதினம் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது (சோ)


## விண்ணப்பம் கோரல்

### விற்பனை பிரதி நிதி தேவை

**கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கான விற்பனை பிரதிநிதி Sales Represcntative ஒருவரும் உதவியாளர் ஒருவரும் தேவை**

**தகைமை:- க.பொ.த (சாதாரண) தரத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கில அறிவு ஓரளவு இருத்தல் வேண்டும்.**

**வயது:- 18-30 வரை**
**பால்:- ஆண்**

**நேர் முகத்தேர்வு 29.03.2005 செவ்வாய் காலை 9.00 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு வருகை தரவும்.**

**முகவரி:- தும்பிக்கையான் களஞ்சியம்,**
**இல. 117 யாழ்சாலை,**
**கிளிநொச்சி.** (5893)


## காணவில்லை



12.03.2005 அன்று குமாரசாமி இராமச்சந்திரன் ராசன் (மாமா) (புத்திகூர்மயற்றவர் வயது - 42) எனபவர் காணாமல் போயுள்ளார் இவர் நீல ரீசேட் அணிந்திருந்தார். இவரை கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது காவல் பணிமனைக்கோ தெரியப்படுத்தவும் தகுந்த சன்மானம் தரப்படும் மலர்விழி இல : 09,மத்தியவகுப்பு, இடதுகரை முத்தையன் கட்டு. (சி.11587)

# சாவு அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சிதம்பரம்

**பிரதான வீதி காங்கேசன் துறையை சொந்த இடமாகவும் (இலக்கம்-20) ஆனந்தபுரம் கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரம் 26.03.2005 ஆம் நாளன்று காலமாகி விட்டார். அன்னார் காலஞ் சென்ற மீனாட்சியின் அன்புக்கணவரும் சரஸ்வதி, செல்வராசா, கலாவதி, பூலோகநாதன் சுமதிதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ( முருகேசு ஓய்வு பெற்ற ஆசிரியர்), நாட்டுப்பற்றாளர் அருளானந்த சிவம், செல்வராணி, ரங்கநாயகி விஜயகுமார் (தமிழீழ காவல்துறை பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும். பகீரதன், சுகன்ஜா, கயல்விழி, சேரலாதன் மதுராந்தகன், வேண்மாள், பிரபாகரன், சங்கீதா, மீனாராணி ( மதுராந்தகி கி.ளி.ம.வி.) விஜயநாதன் தவராஜிதன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதித்தகனக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்**

*தகவல்: – அ. விஜயகுமார்*
*மருமகன்*

(சி.11588)

## திருமதி. நல்லதம்பி இரத்தினம்

**சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது சரவணை கிழக்கு வேலணையில் வசித்து வந்த வருமான திருமதி. நல்லதம்பி இரத்தினம் அவர்கள் 26.03.2005 சனிக்கிழமை அன்று காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனையியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், அபிராமி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சிதம்பரம் ஆகியோரின் மருமகளும், நாகேஸ்வரி, கருநாதேவி, யோகராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சாந்தலிங்கம் (பத்மாரேடர்ஸ் கிளிநொச்சி) மற்றும் இந்துமதி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான பூசணி, நவரத்தினம், இராசலிங்கம் மற்றும் நடராசா, சுந்தரம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னையா, தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும், நித்தியானந்தசிவம் (அபிதா ஸ்ரோர்ஸ் வவுனியா), சந்திரலீலா (லண்டன்), புஸ்பலீலா, பவானந்தன், லதாநிதி, பவாநிதி (லண்டன்), தயாநிதி, துஷ்யந்தன் (லண்டன்), விமலகுமார் (கச்சேரி கிளிநொச்சி), சாந்தகுமார் (அருள் மணி பல்பொருள் வாணிபம் கிளிநொச்சி), கிருஷ்ணகுமார், அனுசியா(கிராம அபிவிருத்தி வங்கி கிளிநொச்சி) அனுராதா (யாழ். பல்கலைக்கழகம்) சுபாஜினி, பாலநேசன், தயா, பாலரூபன், சுபானுஜன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவர், அன்னாரது ஈமக் கிரியைகள் (27.03.2005) பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சரவணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.**

தகவல்:-
(மகன்) ந.யோகராசா
(மணி)

(சி.11589)

சிறிலங்கா கடற்படையினரின்

# கடற்றொழில் அனுமதிப்பத்திரத்தினை மீண்டும் அமுல் படுத்த நடவடிக்கை

~யாழ். மாவட்ட க.தொ.ச.ச.சம்மேளன செயலாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

**சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ். வடமராட்சியின் கரையோரப் பிரதேச கடற்றொழிலாளர்கள் மீதான கடற்றொழில் அனுமதிப்பத்திர நடைமுறைகளை மீண்டும் அமுல் படுத்துவதற்கான நடவடிக்கைகளில் சிறிலங்கா கடற்படையினர் ஈடுபட்டு வருவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச சம்மேளனத்தின் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்துள்ளர்.**

அண்மையில் வடமராட்சியின் கரையோரப் பிரதேசங்களைக் கடுமையாகத் தாக்கிய சுனாமி ஆழிப் பேரனர்த்தத்தினால் இப் பகுதி கடற்றொழிலார்களுக்கென முன்னர் கடற் படையினரால் வழங்கப்பட்டிருந்த கடற்றொழில் அனுமதிப் பத்திரங் கள் பழுதடைந்தும் தொலைந்தும் போயுள்ள நிலையில் கடற் றொழிலாளர் மீதான கடற்றொழிலாளர் அனுமதிப் பத்திர கெடு பிடிகளை இவர்கள் மீண்டும் திணிக்க முடியாத நிலை காணப் படுகின்றது.

எனவே மீண்டும் கடற்றொழிலாளர் மீது கெடுபிடிகளைத் திணிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக படையினர் மீண்டும் கடற்றொழில் அனுமதிப் பத்திரங்களை வழங்க முயற்சிக்கின்றனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்குடன் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந் நடவடிக்கைகள் கண்டனத்திற்குரியவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இராணுவம் பலப்படுத்தப்படுகிறது

(தென்மராட்சி)

யாழ்.தென்மராட்சியிலுள்ள சாவகச்சேரி நகர்ப்பகுதியிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் உள்ள இராணுவக் காவலரண்கள்,மற்றும் படைமுகாம்கள் என்பவற்றை படையினர் பலப் படுத்திவருகின்றனர்.

அண்மைக்காலங்களில் சாவகச்சேரியில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்களின் போது மக்களால் தாக்கப்பட்ட காவலரண்கள் மற்றும் முகாம்கள் என்பனவும்இதில் பலப்படுத்தப்படுகின்றன. இது அப் பகுதி மக்களின் இயல்பு வாழ்விற்குப்பெரும் அச்சுறுத்தலாக வுள்ளது. (33)

## பனை மரங்கள் தறித்து படைமுகாம் பலப்படுத்தல்

(தீவகம்)

யாழ். தீவகத்திலுள்ள வேலணை கடற்படைத் தளத்தை அண்டியுள்ள பகுதிகளில் இருக்கும் தனியார் காணிகளில் காணப்படும் பனை மரங்கள் கடற்படையினரால் தறித்தழிக்கப்பட்டு வருகின்றன..

இப் பகுதியிலிருந்து தறிக்கப்படும் பனை மரங்கள் குற்றிகளாக்கப்பட்டு தீவகத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் படைமுகாம் பலப்படுத்தல் நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்துவதற்காக இராணுவ உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

படையினரது இந் நடவடிக்கைகளால் அப் பகுதியிலுள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

## நலன்புரி நிலையச் சிறார்களிடையே வெப்ப நோய் பரவுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாகக் குடியேறி வாழும் மல்லாகம் சுன்னாகம், இணுவில் போன்ற பகுதிகளிலுள்ள நலன்புரிநிலையங்களில் வசிக்கும் சிறார்களிடையே வெப்ப நோய் அதிகம் பரவி வருகிறது.

குறிப்பாக கண்நோய், சிரங்கு, வெப்பக் காய்ச்சல், வாந்திபேதி அவிச்சல் போன்ற நோய்களே இங்கு அதிகம் பரவி வருவதாக இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் த.கணேஷ் தெரிவித்தார். (33)

## ஞாபகார்த்த மண்டபம் திறப்பு

சுனாமி கடல் அனர்த்தத்தின் போது மரணமடைந்த வாழ்வகத்தைச் சேர்ந்த நிரஞ்சனா ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் இடம்பெற்றது.

வாழ்வக உபதலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் மண்டபத்தை திறந்து வைத்தார்.

அமரர் செல்வி . நிரஞ்சனாவின் திருவுருவப் படத்தினை இராமநாதன கல்லூரி அதிபர் திருமதி . ஆனந்தி சிவஞானசுந்தரம் திரை நீக்கம் செய்து வைத்ததுடன் நினைவுரையையும் ஆற்றினார்.


வாழ்வகம் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சிறப்பு மலரை மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் திருமதி ரதிதேவி சோதிலிங்கம் வெளியிட்டு வைக்க, கணினி கற்கை நெறி நிறுவன இயக்குநர் குலரத்தினம் மலரைப் பெற்றுக் கொண்டனர். (41)

சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர் கல்வி மாணவர்களுக்கு

## சுவிஸ் தமிழ் சமூகத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புலம் பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் சமூகத்தின் நிதி உதவியுடன் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக் கப்பட்டு உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் 32 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.



இந்நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் மாணவர் பேரவை உறுப்பினர் புவிராஜ் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை புலம் பெயர்ந்து வாழும் வினாயகமூர்த்தி செல்லையா மற்றும் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர் இளங்கோ ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பருதி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி வழங்கியதுடன் சிறப்புரையையும் நிகழ்த்தினார். (36)

கடற்பாதுகாப்பு அணைகளை அமைக்க-

## அவுஸ்திரேலிய தொழில் நுட்ப நிபுணர்களின் ஆலோசனை

(வடமராட்சி)

யாழ்.வடமராட்சி கடற்கரை யோரங்களில் கடற்பாதுகாப்பு அணைகளை அமைப்பதற்காக அவுஸ்திரேலிய சூழல் தொழில் நுட்ப நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகள் பெறப்படவுள்ளன.

வடமராட்சிப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடல் அணைகளை அமைப்பதன் மூலம் எதிர்காலக் கடலனர்த்தங்களிலிருந்து கடலோரக் கிராமங்களைப் பாதுகாப்பதற்காக "வேல்ட் விஷன்" என்ற சர்வதேச அமைப்பு நிதியுதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

எனினும் கடல் அணைகளை அமைப்பது தொடர்பில் சூழலியல் தொழில் நுட்ப அறிவுகளை அதிகம் பயன்படுத்த வேண்டியிருப்பதால் வடமராட்சியில் இக் கடல் அணைகளை அமைப்பது குறித்து அவுஸ்திரேலிய சூழல் தொழில் நுட்ப நிபுணர்களிடமிருந்து அது குறித்த ஆலோசனைகள் பெறப் படவுள்ளன. (33)

## பணத்தகராறில் கடைக்குத் தீவைப்பு

பணக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எழுந்த வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து கடையொன்று அடித்து நொருக்கப்பட்டு தீவைக்கப்பட்டுள்ளது. இதில் இருவர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. வட்டிக்கு பணம் கைமாற்றுக்கொடுத்து வாங்குவதில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தைத் தொடர்ந்து முகாமில் இருக்கும் இரு பகுதியினரிடையே இடம் பெற்ற சண்டையில் பெண் ஒருவரும்,ஆண் ஒருவரும் கல்லெறிக் குட்பட்டு தலையிலும், காலிலும் காயமடைந்துள்ளார்கள். அரசியல் துறையில் இது சம்பந்தமாக செய்யப்பட்ட முறைப்பாட்டைத்தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (41)

## தொழில் முயற்சியாளர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன

(கந்தரோடை)

யாழ் கந்தரோடைப் பகுதியில் வாழும் சுயதொழில் முயற்சியாளர்களின் தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான உதவிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் அப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கடன்களை இவ்வமைப்பு வழங்கியுள்ளது. (33)

## பணக் கொடுக்கல் வாங்கல் வாள்வெட்டில் முடிந்தது

-இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

யாழ். பண்டத் தரிப்புப் பகுதியில் பணக் கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட வாய்த் தர்க்கம் வாள் வெட்டில் முடிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மல்லாவியைச் சேர்ந்த தெய்வேந்திரம் பாலச்சந்திரன் (வயது 30) என்பவரும் பத்திமா வீதி பண்டத் தரிப்பை சேர்ந்த அமிர்தலிங்கம் இராசலிங்கம் என்பவருமே இச் சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களாவர். (சு)

# சிறிலங்கா ஆளுந்தரப்பிடம் போராடியே தமிழ்ச் சமூகம் எதையும் பெறவேண்டியுள்ளது

## -வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்

(செட்டிகுளம்)

**கடந்தகாலத்திலும் சரி, இப்போதும்சரி சிறிலங்கா அரசாங்கங்களிடம் தமிழ்ச்சமூகம் போராடித்தான் எதனையும் பெறவேண்டியதாகவுள்ளது. இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்தார்.**

வவுனியா உள்ளூராட்சி அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்ற வடக்குக் கிழக்கு பெருந்தோட்டப் பகுதி சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் மன்றம் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

எமது தாயகப் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம்பெறத் தகுதியான எத்தனையோ குடும்பங்கள் இருந்தும் அரசு முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளுக்கு இந்தத்திட்டத்தினை அமுல்படுத்தாமல் இருப்பதனூடாக இவை தெட்டத் தெளிவாக தெரிகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம், சதாசிவம் கனகரட்ணம், வவுனியா பிரதேச செயலாளர் சுகந்தி துரைசாமி மற்றும் வடக்குக் கிழக்கு நுவரெலியா மாவட்ட சமுர்த்தி உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

முதல்முறையாக வடக்கு கிழக்குப் பகுதி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த அமைப்பு தொடர்ந்தும் சிறப்பாக இயங்க வேண்டும் என்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் தெரிவித்தார்.

இந்த அமைப்பில் உள்ளவர்கள் அனைவரும் இளையவர்கள். இவ்வாறு ஒருஅமைப்பு ஆரம்பிக்கப்பட்டு உள்ளது வரவேற்கத்தக்கது. இவ்வாறு கூட்டங்களை வைத்து குறைகளினைத் தெரிவிப்பதோடு நின்றுவிடாது செயலில்காட்ட வேண்டும். எந்த உதவி வேண்டும் என்றாலும் செய்வதற்குத் தயாராகவுள்ளோம் என்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டு பன்முக படுத்தப்பட்ட நிதியின் கீழ் சமுர்த்தி திட்டத்தின் பணிகளினை முன்னெடுப்பதற்கு ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாவினை ஒதுக்கியிருப்பதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். சமுர்த்திவேலைத்திட்டத்தினை சிறிலங்காஅரசாங்கம் 1996ஆம் ஆண்டு ஆரம்பித்த போதும் தமிழ் பிரதேசங்களில் 2000ஆம் ஆண்டு அளவிலேயே அரசு அமுல்படுத்தியதாகவும் அதிலும் மன்னார், வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் இன்றும் இவை ஆரம்பிக்கவில்லை.

சமுர்த்தி நிவாரணம் பெற தகுதியான ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இருந்தும் அவை நிவாரணம் பெறாமலுள்ளன, அத்துடன் 102 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடமுள்ளது. எமது பிரதேச உத்தியோகஸ்தர்கள் மூன்று இடங்களில் பதில் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். என்று வவுனியா பிரதேச செயலாளர் சுகந்தி துரைசாமி தெரிவித்தார்.

இந்த சங்கத்தின் தலைவராக சிறிதரன், செயலாளராக சீ.ஜீவாநந்தராஜா மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (21)

## மரண அத்தாட்சிப்பத்திரம் 3416 பேருக்கு வழங்கல்

முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமியால் உயிர் இழந்தவர்களில் 3146 பேரின் மரண அத்தாட்சிப்பத்திரம் இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். இவர்களுக்கு உடனடிக்கொடுப்பனவாக 15000 ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். மேலும் காணாமல் போனவர்கள் குறித்த பதிவுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அவர் கூறினார். (20)



சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென அளம்பில் இராமசாமி தோட்டத்தில் அமைந்துள்ள தற்காலிக குடியிருப்பில் முன்பள்ளியொன்றை வேள்ட்விசன் நிறுவன முன்பள்ளி இணைப்பாளர் ஜெகதீஸ்வரன் நாடாவினை வெட்டித்திறந்து வைக்கின்றார். (படம் :-சகிலா)

## -முல்லை மாவட்டத்தில்- சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லை மக்களிற்கு ஆர்.ஓ.எம்.வி.ரி அமைப்பினால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பங்குத் தந்தையின் தலைமையில் இதுவரை கட்டம் கட்டமாக மூன்று தடவைகள் குடும்பங்களின் விகிதாசார முறைப்படி இவை வழங்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இதன் ஒரு கட்டமாக சிலாவத்தை புனித அன்னம்மாள் கோயிலில் வைத்து ஒரு தொகுதி மக்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் 69 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கல்வியினை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த புதன் கிழமை 5.00 மணிக்கு கதிரைகள், மேசைகள் என்பன வழங்கப்பட்டதுடன் மேலும் க.பொ.த.சாதாரண தரத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் கதிரைகள், மேசைகள் என்பன வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (20)

## எரிபொருள் நிரப்பு நிலையம் நானாட்டான் பகுதிக்குத் தேவை

### அரச அதிபரிடம் மக்கள் கோரிக்கை

(மன்னார்)

நானாட்டான் பிரதேசத்தில் எரிபொருள் விற்பனை நிலையமொன்றை நிர்மாணிக்குமாறு இப்பகுதி மக்கள் மன்னார் அரச அதிபரிடம் கோரியுள்ளனர்.

மன்னார் நகரத்திலிருந்து 18 கிலோ மீற்றர் தூரம் உள்ள இப்பிரதேசத்தில் ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இங்கு 280 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்களும், நூறிற்கும் மேற்பட்ட உந்துருளிகளும், இன்னும் பல வாகனங்களும் பாவனையில் உள்ளன. இவர்கள் எரிபொருளை ஒன்பது கிலோமீற்றர் தூரம் உள்ள முருங்கனுக்கும் , ஆறு கிலோ மீற்றர் தூரம் உள்ள உயிலங்குளத்திற்கும் வந்து நிரப்ப வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் மக்கள் வர்த்தகர்கள், விவசாயிகள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (18)

## "தூய மனதுடன்" நூல் வெளியீடு

(கண்டாவளை)

பரமு புத்திரனின் "தூயமனதுடன்" நூல் வெளியீட்டு விழா அண்மையில் விசுவமடு மகாவித்தியாலயத்தில் வித்தியாலய முதல்வர் ஐ.கே. தவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை கிளிநொச்சி ம.வி.பிரதி முதல்வர் அ.பங்கையற்செல்வன் நிகழ்த்தினார். ஆசியுரையை கிளி.தர்மபுரம் அ.த.க. பாடசாலை முதல்வர் திருமதி சி.வேல்முருகு நிகழ்த்தினார். நூல் வெளியீட்டின் சிறப்புரையை கிளி.பிரமந்தனாறு ம.வி.முதல்வர் க.ச.சிவலிங்கம் நிகழ்த்தினார். வாழ்த்துரையை விசுவமடு அதிசய விநாயகர் ஆலயக் குருக்கள் இரகுநாதக்குருக்கள் நிகழ்த்தினார்.


தொடர்ந்து நூலின் வெளியீட்டுரையை இராமநாதபுரம் ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் சி.செந்தில் வடிவேல் நிகழ்த்த பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளர் சி.கந்தசாமி முதல் பிரதியை வெளியிட்டுவைத்தார். அப்பிரதியை ஜெகம்நகையக உரிமையாளர் பெற்றுக்கொண்டார். நூலின் ஆய்வுரையை கலாநிதி சோமஸ்கந்தன் நிகழ்த்தினார். (14)

## மட்டக்களப்பு வலய முன்பள்ளிகளின் பிரதேச இணைப்பாளர்களுக்குப் பயிற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் நிர்வகிக்கப்பட்டுவரும் மட்டக்களப்பு முன்பள்ளி வலய பிரதேச இணைப்பாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை கடந்த 24 ஆம் திகதி மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகத்தில் இடம் பெற்றது. இதில் கல்குடா வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ஜி. தம்பிப்பிள்ளை, மட்டக்களப்பு வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.சிறினிவாசன், பட்டிருப்பு வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. ம.தங்கையா, மற்றும் முன்பள்ளிப் பிரதேச வலய இணைப்பாளர்க ளெனப்பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இப்பயிற்சிப்பட்டறையில் முன்பள்ளிச் சிறார்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல தரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டன. அதாவது சிறார்களின் உளவியல், போசாக்கு, மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் ஆளுமைவிருத்தி, உள நலமும் கல்விச் சூழலும், உள நலம் என்றால் என்ன? உளநலமும் இயல்புகளும், உளநலத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், போசாக்குமிக்க, போசாக்கற்ற உணவுவகைகளை இனங்காணல், சுகவாழ்வும்,போசாக்கும், மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி?, நலமற்ற குடும்பம், முன்பள்ளிச் சிறார்களின் கல்வி மற்றும் ஏனைய அபிவிருத்திகளில் பெற்றோர்களின் பங்கு, பிள்ளைகளின் தேவைகள், முன்பள்ளி ஆசிரியர்களின் கடமைகள் ஆகிய பலவிடயங்கள் ஆராயப்பட்டதையடுத்து பயிற்சிப்பட்டறை இனிதே நிறைவு பெற்றது.



துணுக்காய்ப் பிரதேச காவல்துறையினரால் வீதி விபத்துக்களைத் தடுக்கும்வகையில் கடந்த 17ஆம் திகதி முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. மல்லாவி மத்தியகல்லூரிக்கு அண்மையாக இடம் பெற்ற அறிவுறுத்தல்செயற்பாட்டை படத்தில் காண்க. (படம் :- அன்ரனி)

## அன்னையர் முன்னணி ஏற்பாட்டில் பெண்கள் விழிப்புணர்வூட்டல் கருத்தமர்வு

முல்லை மாவட்ட அன்னையர் முன்னணியினரின் ஏற்பாட்டில் பெண்கள் விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கும் கிராம தரிசிப்பும் கடந்த வியாழனன்று புதுக்குடியிருப்பில் உள்ள கைவேலி 100 வீட்டுத் திட்டத்தில் நடைபெற்றது.

காலை 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணிவரை வீடுவீடாகச் சென்று பெண்கள் தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்ததுடன் பி.ப.4.00 மணிக்கு ராஜ் முன்பள்ளியில் முல்லை மாவட்ட அன்னையர் முன்னணி செயலாளரின் தலைமையில் கருத்தரங்கு அகவணக்கத்துடன் ஆரம்பமானது. இதில் முல்லை மாவட்டஅரசியல்துறைப் பொறுப்பாளர்செ.முகுந்தன், அரசியல் துறையைச்சேர்ந்த ஈழவன், முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேழினி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இந்நிகழ்வானது கைவேலி மாதர் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றது. அத்துடன் கிராம மக்களும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். (08)

## மடுப்பிரதேசத்தில் நோயாளர்களுக்குச் சிகிச்சை

மடுப்பிரதேசம் ஆண்டான்குளம், தோணிதாட்ட மடு ஆகிய கிராமங்களில் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரும், மட்டு.அம்பாறை மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரும் இணைந்து அப்பகுதி நோயாளர்களுக்கான சிகிச்சையினை வழங்கினர். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மேற்படி சிகிச்சையின்போது 150 இற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பெற்றதுடன். சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## அத்தியாவசிய சேவைகள் கூட்டம்

(அலுவலக செய்தியாளா)

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (சோ)

# பாக்தாத்தில் கார் குண்டுவெடிப்பு
# 11 பொலிசார் உடல் சிதறிப்பலி

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் கார் ஒன்றை நிறுத்திப் பொலிசார் சோதனையிட முயன்றபோது அது வெடித்துச் சிதறியதில் பதினொரு பொலிசார் உடல் சிதறிப் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.**

ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கும், சதாம் ஆதரவு படைகளுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. நேற்று முன்தினம் ரமாடி நகர் சோதனைச் சாவடியில் ஈராக் கமாண்டோ பொலிசார் ஒரு காரை வழிமறித்து நிறுத்த முற்பட்டபோது அது வெடித்துச் சிதறியது. இதில் 11 பொலிசார் அதேஇடத்தில் உடல் சிதறிப் பலியாகினர். ஒன்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். சம்பவம் குறித்துப் பொலிசார் கூறுகையில், குண்டு நிரப்பிய காரில் வந்த தீவிரவாதி காரை வெடிக்கச் செய்ததாகக் கூறினார். மேலும் ஈராக் தலைநகர் பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் ஒரு கார் அநாதையாக நின்றது. அந்தக் காரை சோதனையிட்ட போது ஐந்து ஈராக் பெண்கள் குண்டடிபட்டு இறந்துகிடந்தனர். இந்தப்பெண்கள் அனைவரும் அமெரிக்க ராணுவத்தினருக்காக பணியாற்றிவந்தனர் எனவும் தீவிரவாதிகள் அவர்களைச் சுட்டுக் கொன்றிருக்கலாமெனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# ஜாக்சன் கைரேகை நீதிமன்றில் தாக்கல்

பொப் இசைப்பாடகர் மைக்கேல் ஜாக்சன், தனது வீட்டில் சிறுவனுக்கு ஆபாசப் படம் காட்டிய புத்தகத்தின் மீது பதிந்த கைரேகைகளை நீதிமன்றில் அரச வக்கீல் சமர்ப்பித்துள்ளார்.




அமெரிக்காவின் பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன், சிறுவர்களை பாலியல் ரீதியாக கொடுமைப்படுத்தியதாக பத்து வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. கலிபோர்னியாவில் உள்ள சான்டாமரியா நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணை நடந்து வருகின்றது.

பண்ணை வீடான நெவர் லேண்டில் தனக்குஆபாசப் படம் காட்டி பாலியல் கொடுமைப்படுத்தியதாக மைக்கேல் ஜாக்சன் மீது 15 வயது சிறுவன் புகார் கூறியுள்ளான். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இந்தச் சிறுவனை எனது பண்ணை வீட்டுக்கு அழைத்து சந்தோஷப்படுத்தினேன். மற்றபடி சிறுவனிடம் தவறாக நடக்கவில்லை என ஜாக்சன் கூறியிருந்தார்.

# போப்பின் உடல் நிலையில் பின்னடைவு
# பிரார்த்தனையில் பங்கேற்கவில்லை

(வத்திக்கான்)



போப்பாண்டவாின் உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அதனால் பெரிய வெள்ளிக் கிழமை பிரார்த்தனையில் அவர் பங்கேற்கவில்லை.

போப் இரண்டாவது ஜான் பாலுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவரது கழுத்துப் பகுதியில் ஓட்டை போட்டு குழாய் சொருகப்பட்டுள்ளது. ரோம் நகரிலுள்ளகெமல்லி மருத்துவமனையில் இந்த சத்திரசிகிச்சை நடந்தது.இந்தவாரத் தொடக்கத்தில் போப்பின் உடல்நிலை மோசமடைந்து விட்டதாக இத்தாலி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. கடைசியாக போப் கடந்த புதன் கிழமை தனது அறையின் ஜன்னல் வழியாக பொது மக்களுக்கு ஒரு நிமிடம் காட்சி தந்தார். அப்போது எதுவும் பேசவில்லை கழுத்தில் ஓட்டை போட்டு குழாய் சொருகியிருப்பதால் அவரால் பேச முடியவில்லை ஏசு இறந்த பெரிய வெள்ளிக்கிழமை அன்று வழக்கமாக போப் வத்திக்கான் நகரில் மூன்று நிகழ்ச்சிகளில் பங்கேற்பார். ஆனால் பெரிய வெள்ளிக்கிழமையான நேற்று முன்தினம் போப் எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்கவில்லை. அவரின் சார்பில் மூத்த கார்டினல் ஜோசப் ரட்சிங்கர் கலந்து கொண்டார். போப்பின் உடல்நிலை பின்னடைவு ஏற்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. இன்று ஈஸ்டர் பண்டிகை நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிகிறது.



புனித வெள்ளியையொட்டி பிலிப்பைன்ஸ் நாட்டில் சென்ட் லூசியா பகுதியில் மேரிஜேனி என்ற பெண் தன்னைச் சிலுவையில் அறைந்து கொண்டு பிரார்த்தனையை நிறைவேற்றுகிறார்.

# சியாச் சென் பகுதியிலிருந்து படையினரை வாபஸ்பெறோம் - பாகிஸ்தான் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

சியாச்சென் பகுதியில் இருந்து படைகளை வாபஸ் பெற மாட்டோம் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமபாத்தில் நடந்த ஒரு விழாவில், பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித் மஹ்மூத் கசூரி கலந்துகொண்டு பேசினார். இதன் பிறகு அவர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

சியாச்சென் மலைப்பகுதியில் இருந்து படைகளை வாபஸ் பெறும் எண்ணம் பாகிஸ்தானுக்கு இல்லை. அப்படி நாங்கள் ஒருதலைப்பட்சமாக வாபஸ் பெற்றால் அது பலவீனமாகக் கருதப்படும்.

படைகளை வாபஸ் பெறுவது என்பது முன்னேற்றமான நடவடிக்கைதான். இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே போடப்பட்ட படைகளை வாபஸ் வாங்கும் ஒப்பந்தம் அப்படியே உள்ளது. இவ்வாறு பாகிஸ்தான் அமைச்சர் கசூரி கூறினார்.



பிஜிங் அரசு தாய்வானை விட்டு விலகமறுத்துள்ளதைக் கண்டித்து தாய்பேய் நகரில் தாய்வான் ஆதரவாளர்கள் நடத்தும் எதிர்ப்பு ஊர்வலம்.

# பிரபல டாக்டரின் மகன் தாயாரை குத்திக் கொன்றார்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பிரபலமான இந்திய டாக்டரின் மகன் தாயாரைக் குத்திக்கொலை செய்தார்.

அமெரிக்க தலைநகர்வோஷிங்டனில் வசிக்கும் பிரபல இந்திய டாக்டர் ராஜேஷ் இவரது மனைவி கிரண் (வயது 52) இவர்களுக்கு ஜெயந்த் (வயது 20) என்ற மகன் உள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு ஜெயந்த் தனது தாயார் கிரணை கத்தியால் குத்திக் கொலை செய்து விட்டுத் தப்பியோடிவிட்டார்.

பொலிஸ் விசாரணையில், கிரணை அவரது மகன் ஜெயந்த் கொலை செய்திருப்பது தெரிய வந்தது. அவரைப் பொலிசார் வலை வீசித் தேடிவருகின்றனர்.

ஜெயந்த் மனநிலை பாதிக்கப் பட்டவர் என்று அக்கம் பக்கத்தினர் தெரிவித்துள்ளனர். மனநலப் பாதிப்புக் காரணமாக அவர் பெற்ற தாயையே கொலை செய்து விட்டுத் தப்பி ஓடி விட்டதாக அமெரிக்கப் பொலிசார் கூறுகின்றனர்.



தாய்லாந்தின் பங்கா மாகாணத்தில் கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியால் உடைந்த வீட்டைத் திருத்துவதில் ஈடுபட்டுள்ள மேசன் தொழிலாளியை முதலாவதுபடத்திலும், பிரபல விடுதியொன்றின் முன்னாலுள்ள கழிவுகளை அகற்றும் புல்டோசரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற ஒன்பது சீனர்கள் பரிதாப மரணம்

இத்தாலியில் சட்டவிரோதமாக குடியேறுவதற்காக மால்டாவில் படகில் சென்ற சீனர்கள் நடுக்கடலில் தூக்கி வீசப்பட்டனர். இதில் ஒன்பது சீனர்கள் பலியானார்கள்.

படகில் ஆட்களை ஏற்றிக் கொண்டு வருவதைப் பொலிசார் பார்த்துவிட்டால், கைது செய்து விடுவார்களே என்ற பயத்தில், கரையை அடைவதற்கு முன்பே படகைவிட்டு இறக்கும்படி சீனர்களை கட்டாயப் படுத்தியதாலும், படகில் இருந்து தூக்கி வீசியதாலும், கடலில் தத்தளித்து மூச்சுத்திணறி ஒன்பது பேர் பலியானார்கள். இந்தச் சம்பவம் சிசில நகரம் அருகே நடந்துள்ளது.

# சீக்கிய சிறுவன் அமெரிக்காவில் கத்தி வைத்திருக்க அனுமதி

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் படித்து வரும் சீக்கிய சிறுவன் அமன் தீப்சிங். சீக்கிய மத வழக்கப்படி, சிறு கத்தியை எடுத்துக்கொண்டு பாடசாலை சென்றபோது பாடசாலை நிர்வாகம் அவனை எட்டு நாட்களுக்கு இடைநிறுத்தியது.

இதைத் தொடர்ந்து அமன்தீப்சிங்கின் அண்ணன் பாடசாலை அதிகாரிகளைச் சந்தித்து விளக்கம் தெரிவித்தார். அதோடு மத சுதந்திரத்துக்கான பெக்கெட் அறக்கட்டளை தன் வக்கீலை அனுப்பி, அமன்தீப் சிங்கை தடுப்பது மத சுதந்திரத்தில் தலையிடுவது ஆகும் என்று கூறி வலியுறுத்தச் செய்தது. இதை ஏற்றுப் பாடசாலை நிர்வாகம், அமன்தீப் சிங்குக்கு கத்தி வைத்துக்கொள்ள அனுமதியளித்தது.

# மூளை சேதமடைந்த டெர்ரியின் உயிரைக்காப்பாற்ற நீதிமன்று மறுப்பு

(வோஷிங்டன்)

மூளைச் சேதம் அடைந்த டெர்ரி ஷியாவோவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவரது பெற்றோர் எடுத்த கடைசி முயற்சியும் தோல்வியடைந்தது.

குழாய் மூலம் அளிக்கப்படும் உணவால் வாழ்ந்து வரும் டெர்ரி வெறும் ஜடமாக இருக்கிறார். அவருக்கு உணர்வு கிடையாது ஞாபக சக்தி இல்லை. இதனால் அவர் மரணம் அடைய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு, அவர் கணவர் மைக்கேல் ஷியாவோ நீதி மன்றில் வழக்குத் தொடர்ந்தார். இதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, அவரது உடலில் பொருத்தப் பட்டுள்ள உணர்வுக்கான குழாய்களை அகற்றும்படி உத்தரவிட்டது. இந்தப் பிரச்சினையில் பாராளுமன்றம் தலை யிட்டு, அவர் உயிர் வாழ அனு மதிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தது. இதற்கிடையில் டெர்ரியின் பெற்றோர் புளோரிடா நீதி மன்றில் உயிர் வாழ அனுமதிக் கும்படி வழக்குத் தொடர்ந்தனர். இதை நீதிமன்று ஏற்கவில்லை அவர் மரணமடைய அனு மதித்தது.

உணவு இல்லை. டெர்ரி இரு வாரம் உயிர் வாழ முடியும் உணவுக் குழாய் அகற்றப்பட்டு ஒரு வாரம் ஆகிவிட்டது. இன்னும் ஒரு வாரம் மட்டுமேஅவர் உயிர் வாழ்வார் என்று கூறப்படுகிறது.

# "வெண்தாமரைஇயக்க நாயகனுக்கு"

# பதவி இறக்கம் ஏன்?

சிறிலங்காவின் தற்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து உயர் பதவிக்குத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் அவர் ஒரு சிறந்த முற்போக்குவாத புத்திஜீவியாக-பிரேமதாசவின் 'கொடுங்கோன்மை' ஆட்சியிலிருந்து மக்களை மீட்கத் தகுதியான ரட்சகராக-சனநாயகத்தை மீட்கவந்தவராக அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அவர் தனது 1994 தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றுவது. அதற்கு அவர் ஆறுமாத காலக்கெடு விதித்திருந்தார். இரண்டாவது சமாதான நடவடிக்கைகள் மூலம் என்று சந்தேகம்கூட எழுந்தது.

ஆனால் பிரேமதாசவின் மரணத்திற்குப் பின்னர் தற்செயலாக சனாதிபதியாகப் பதிவியேற்ற டி.பி.விஜயதுங்கவின் பலவீனம் காரணமாகவும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பியதன் காரணமாகவும் சந்திரிகாவால் உயர் பதவியைக் கைப்பற்ற முடிந்தது.

பிரேமதாசவின் "இருண்ட பயபபீதி யுகம் முடிவடைந்தது" என்றாதியில் டி.பி.விஜயதுங்கவின் ஆட்சிக் காலத்தில் ஐ.தே க.விற்கு எதிராக பல சுயாதீன ஊடகங்கள் செயற்பட்டு வந்தன. பல தனிப்பட்ட ஊடகவியலாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தைக் காரசாரமாக விமர்சிக்கும் துணிவைப் இன்றுவரை அமைக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் ஊடகத்துறையை சுயாதீனமாக இயங்கவிட சனாதிபதி சந்திரிகா தயாராக இல்லை என்பது இதன் மூலம் பெறப்பட்டது.

இதேவேளை இப்பொழுது இரண்டாது தடவை சனாதிபதியாகப்பதவி வகித்து அது முடிவடையும் காலம் நெருங்குகிறது. அவர் அரசியலில் இருந்து ஒதுங்குவதா? அல்லது அதிகாரத்தில் எவ்வகையிலேனும் மேலும் நீடிப்பதா? என்ற கேள்வி அவர் முன் இப்பொழுது பூதாகரமாக எழுந்துள்ளது. இதற்கு விடை காணும் முயற்சியில் அவர் இப்பொழுது தீவிரமாக இறங்கியிருப்பதற்கான அறிகுறிகளே காணப்படுதிகதி முதல் தனது நேரடிக்கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்திருப்பது பலகேள்விகளை எழுப்புகிறது. முன்னர் ஐ.தே.க. வசமிருந்த ஊடகத்துறையை பறித்தார் எனின் இப்பொழுது சனாதிபதியின் மிகுந்த விசுவாசியாகக் கருதப்பட்ட மங்களசமரவீரவிடமிருந்து அத்துறை பறிக்கப்பட்டமைக்குக் காரணம் மங்கள சமரவீர மீதான அவ நம்பிக்கையா? அல்லது அதனிலிருந்து வேறுபட்ட காரணங்கள் உள்ளனவா? என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது.



சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் மிகவும் செல்வாக்கு மிக்கவர்களில் ஒருவராக விளங்கியவர் மங்களசமரவீர இவர் ஊடகத்துறை அமைச்சராக பதவியிலிருந்தது இது தான் முதற்தடவையல்ல பொ.ஐ.மு.வின் முதலாவது ஆட்சிக்காலத்திலேயே அவர் ஊடகத்துறை அமைச்சராகத்தான் பணிபுரிந்து வந்திருக்கிறார். அது மட்டுமல்ல சிறிலங்காவின் பட்டி தொட்டியெல்லாம் சென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பிரச்சாரம் செய்து வந்த "வெண் தாமரை இயக்கம்" மங்கள சமரவீரவின் பொறுப்பிலேயே செயற்பட்டு வந்தது. அனுருத்தரத்வத்த, எஸ்.பி.திஸாநாயக்க, மகிந்தராஜபக்ஷ வரிசையில் வைத்துப் பார்க் கத்தக்க நிலையில் இவர் இருந்துள்ளார்.



2001 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் எஸ்.பி. திஸாநாயக்கவின் வெளியேற்றம் அனுருத்தரத்வத்த மீதான கொலைக்குற்றச்சாட்டு என்பனவற்றுக்குப் பின் கட்சியில் இவரது செல்வாக்கு மேலும் அதிகரித்தது.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி தோல்வியடைந்த பின் மீண்டும் அதனை எவ்வகையிலேனும் ஆட்சிக்குக் கொண்டுவர ஜே.வி.பி. யுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது என்ற விடயத்தை செயற்படுத்திக் காட்டியவர்களில் மிக முக்கியமானவர் இவர். இது தொடர்பான பேச்சுவார்த்தைக் குழுவில் மைத்திரிபால சிறிசேன, அநுரா பண்டாரநாயக்க என்போர் இடம் பெற்றிருந்தாலும் மங்கள சமரவீரவின் செல்வாக்கே இவ்விடயத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இணக்கத்துக்குக் கொண்டுவர உதவியிருக்கின்றது.

இதன் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியாக அமரமுடிந்திருக்கிறது.

ஆனால் அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டாலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தான் நினைத்ததைச் சாதிக்க முடிந்திருக்கிறதா? என்ற கேள்வி எழுகின்றபோது பதில் சாதகமானதாக இல்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்பொழுது தனது அரசியல் எதிர்காலம் குறித்து விரைந்து செயற்பட வேண்டிய நிலையில் இருக்கிறார். ஆனால் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் அதற்குச் சாதகமானதாக இல்லை. அரசியலமைப்பு ரீதியான பாரிய மாற்றமொன்றை மேற்கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சித்துக் கொண்டிருக்கையில், ஜே.வி.பி சிறுசிறு பிரச்சினைகளுக்கெல்லாம் போர்க்கொடி தூக்குகிறது என்பதே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாடாகும். இந்நிலையில் பாரிய அரசியலமைப்பு மாற்றமொன்றைக் கொண்டு வர ஜே.வி.பிக்கு எவ்வளவு விட்டுக் கொடுப்புக்களைச் செய்யவேண்டி வருமோ என்பது சந்திரிகா அம்மையாரின் தற்போதுள்ள அச்சமாகும.

எனவே மங்கள சமரவீரவின் ஊடகத்துறை பதவியைப் பறித்தது அவரின் கடந்தகாலச் செயற்பாடுகளால் தற்போது ஏற்பட்டுள்ள விளைவுகளின் பெறுபேறா? அல்லது சந்திரிகா எதிர்பார்க்கும் அரசியலமைப்பு மாற்றத்திற்கு ஜே.வி.பியை மங்கள சமரவீரவால் இணங்கச் செய்ய முடியாமல் போனதன் விளைவா? அல்லது ஜே.வி.பியுடன் தொடர்ந்தும் இணக்கப்போக்கை மங்கள சமரவீர கடைப்பிடிப்பதனால் ஏற்பட்ட ஆத்திரமா?

ஏனெனில் அண்மையில் தான் அமைச்சர் மங்கள சமரவீர ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின்சில்வாவுடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டிருந்தார். அதாவது அரச ஊடகங்கள் ஜே.வி.பியை புறக்கணிப்பதாக எழுந்த குற்றச் சாட்டுத் தொடர்பாக இதன்போது ஆராயப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜே.வி.பி.யின் பிரச்சாரங்களை அரச ஊடகங்களில் வெளியிடுவதாயின் அது ஐ.தே.க.வின் அரச எதிர்ப்புப் பிரச்சாரங்களிலும் மிக மோசமான விளைவை சனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்படுத்தும் என்பது வெளிப்படை. ஆனால் மங்கள சமரவீரவோ " முன்னணிக்குள் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் தத்தம் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடலாம். விவாதிக்கலாம். அது எமது பலத்தின் வெளிப்பாடாகும்" என்று கூறுகிறார்.

இவ்வாறான நிலையில் மங்கள சமரவீரவின் வசம் இருந்த ஊடகத்துறையை தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவது போன்று தனது தலைமையிலான செயலணியின் கீழ் கொண்டு வந்திருப்பது ஒரு பாரிய மாற்றமாகும்.

இதற்கு மங்களசமரவீர மீது கொண்ட அவநம்பிக்கை, அல்லது அவரது செயல்திறமை மீது சனாதிபதி கொண்ட சந்தேகம் என்பவற்றை விட தேர்தல் ஒன்றுக்கு விரைவில் சந்திரிகா முகம் கொடுக்கத் தயாராகி வருகின்றமையையும் இது வெளிப்படுத்துகிறது. அது சர்வசன வாக்கெடுப்பாகவும் இருக்கலாம். அது அரசியலமைப்பு ரீதியான மாற்றத்திற்கு சாதகமாக அமையுமா? என்ற சந்தேகம் எழுந்த நிலையில் வேறும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த சனாதிபதி சந்திரிகா குறுக்குவழிகளில் முயலலாம். இதற்கு அவருக்கு ஊடகத்தின் பலம் முழுமையாகத் தேவைப்படுகிறது என்பதையே அவரது இந்நடவடிக்கை காட்டுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது. ஆனால் அவர் "சமாதானத்துக்கான யுத்தத்தை" ஆரம்பித்து சிறிலங்காவைப் படுகுழிக்குள் தள்ளினார்.

மூன்றாவது விடயம் ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பது அதாவது நீதி, நிர்வாகம், பொலிஸ், தேர்தல், ஊடகம் என்பவற்றுக்குச் சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்து அவற்றின் பொறுப்பிலே இத்துறைகளை இயங்கவிடுவது.

இந்த ஐந்து முக்கிய துறைகளுக்கும் சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பதற்கு அவர் அப்போது வைத்திருந்த காரணம், தேர்தல் காலத்தில் இவை ஐந்தும் முக்கியத்துவம் வாய்ந்தவை, அவை சுயாதீனமாகச் செயற்படுமாயின், சுதந்திரமான, நீதியான தேர்தல் நடைபெறும் என்பதாகும்.

இவ்வாறான ஒரு கருத்தைஅவர் கொண்டிருக்கையில் அவர் சார்ந்திருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தது 17 நீண்ட வருடங்கள் ஆட்சி ஏறமுடியாத நிலையில் தத்தளித்துககொண்டிருந்தது. அதிலும் அரசியல் குள்ளநரி என வர்ணிக்கப்படும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிமுறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை என்பவற்றுக்கு மத்தியில் மேற்குறிப்பிட்ட ஐந்து துறைகளையும் கைவசம் வைத்துக் கொண்டு நடத்தப்பட்ட தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் வெற்றி பெற முடியவில்லை. எப்பொழுதா [illegible] வெற்றிபெற்றுவிட முடியுமா? பெற்றிருந்தனர். பலர் வெளிப்படையாக சந்திரிகா குமாரதுங்கவை ஆதரித்தனர். சந்திரிகா குமாரதுங்க சனாதிபதியாவதற்கு இது பெரிதும் உதவியது என்பதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். இதன் மூலம் ஊடகத்தின் சக்தியை அவர் புரிந்துகொண்டிருந்தார்.

இந்த வகையில் அவர் தனது முதலாவது ஆட்சிக்காலத்தில் இந்த ஐந்து விடயங்களில் எவற்றுக்கும் சுயாதீன ஆணைக்குழுவை நியமிக்க முன்வரவில்லை.

ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணியின் இரண்டாவது பாராளுமன்ற ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியை ஜே.வி.பி.யின் ஆதரவுடன் கழிக்க வேண்டியநிலை ஏற்பட்ட போது ஜே.வி.பியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. இதன் அடிப்படையில் நான்கு சுயாதீன ஆணைக் குழுக்களை அமைப்பதற்கு சட்டமூலம் கொண்டுவர சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனபட்டிருந்தார். 17 ஆவது திருத்தச்சட்ட மூலம் கொண்டு வரபபட்டு இச்சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைப்பதற்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆனால் அதன் போது ஊடகத் துறைக்கு சுயாதீன ஆணைக்குழு அமைக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணக்கம் காட்டவில்லை. ஏனைய நீதி, நிர்வாகம், தேர்தல்,பொலிஸ் ஆகிய துறைகளுக்கே சுயாதீன ஆணைக் குழுக்களை அமைக்க இச்சட்டம் வழி வகுக்கிறது.

ஆனால் இவையும் இன்றுவரை செயறபடுகினறனவா? என்பது கேள்விக்குரியதே. உதாரணமாக சுயாதீன தேர்தல் ஆணைக்குழு கின்றன. இதற்கு அரசியலமைப்பு மாற்றம் அவசியமாகின்றது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை இந்த அரசியலமைப்பு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டிய பாராளுமன்றம் அவரது கையில் இருக்கவில்லை.

இதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கு முன் அவர் மூன்று அமைச்சுக்களைக் கைப்பற்றினார்.

**வேலவன்**

அவை பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை என்பனவாகும்.

அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எப்பொழுதும் தேர்தல் காலத்தில் அதிகாரம்-செல்வாக்குச் செலுத்தக்கூடிய பொலிஸ், தேர்தல் திணைக்களம், ஊடகம் இந்த மூன்றுதுறைகளையும் தன்வசம் வைத்திருக்க வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்பது இதன் மூலம் புலப்படுப்படுகிறது.

இதனடிப்படையில் பார்க்கும்போது மங்கள சமரவீரவின் கையிலிருந்த ஊடகத்துறையை கடந்த 14 ஆம்

# கமராவை கையில் வைத்துக்கொண்டு உடல்களையும் மீட்டுக்கொண்டிருந்தோம்

**இப்படியான பயங்கர சம்பவங்களை நான் கண்டதேயில்லை. எதைப் படம் பிடிப்பது எதை விடுவது என்று கூடத் தெரியவில்லை. எல்லாமே ஆவணம் செய்ய வேண்டியதானதாகத்தான் இருந்தது. கண்ணில்பட்ட சம்பவங்கள் எல்லாமே உயிர்த்துடிப்பானதாய் வேதனையைக் கிளப்பி விடுவதாய்த்தான் இருந்தன. எல்லாமே பயங்கரமாய் இருந்தது. ஒற்றைக்கையில் கமராவுடன் படம் பிடித்தபடி மற்றக் கையில் மீட்பு வேலைகளைச் செய்துகொண்டிருந்தோம். உடல்கள் இருந்த நிலையில் அவற்றை ஆவணமாக்குவதுடன் மட்டும் நின்றுவிடாது மீட்புவேலைகளிலும் ஈடுபட்டோம் என்று தனது அன்றைய தினப் படப்பிடிப்பு அனுபவத்தைக் கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் மகளிர் பிரிவுப் போராளி குயிலினி. அவர் பகிர்ந்தவை இந்தப் பகுதியில்.**



## பகுதி—43

**அ.லோகீசன்**

தமிழீழத்தின் கிழக்குப் பகுதிகளை கடல் பேரலைகள் தாக்கி விட்டதாகத்தான் எங்களுக்கு முதலில் தகவல் கிடைத்தது. இவ்வாறு தாக்கிய கடல் பேரலைகள் முல்லைத்தீவையும் தாக்கி இருக்கலாம் என்று சொல்லப்பட்டது.

கடல் பேரலைகள் இப்படிப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் நினைக்கவேயில்லை. ஒரு கட்டத்தில் முல் லைத் தீவிலும் கடல் வந்து அடிச்சுப்போட்டுதாம் என்ற தகவலும் வந்தது.

இந்த நிலையில் படப்பிடிப்புச் செய்வதற்காக வழமையாகப் போவதைப் போலத்தான் போனோம். கிளிநொச்சியில் இருந்து புறப்பட்டதால் கிளிநொச்சி வைத்தியசாலையில் நிலைமையைப் பார்ப்போம் என்று நினைத்தபடி வைத்திய சாலைக்குள் போனோம்.

அங்கு கண்ட காட்சிகள் எல்லாம் கோரமாய் இருந்தது. பெருமளவான காயக்காரர்கள் குவிந்து போயிருந்தார்கள். ஒவ்வொரு காயக்காரரையும் பார்க்கின்றபொழுது சம்பவத்தின் வேகம் தெரிந்தது. கடல் இப்படி அடித்ததா? என்று கூடச் சிந்திக்கவைத்தது.

உயிரிழந்த நிலையில் எவரும் வைத்தியசாலை க்கு வரவில்லை அதனால் உயிரிழப்புக்கள் குறைவு. காயப்பட்டவர்கள் தான் அதிகம் போல் இருக்கிறது எண்டு நினைச்சன். கிளி. வைத்திய சாலையின் செயற்பாடுகள் விறுவிறுப்பாய் இருந்தது. அம்பீயூலன்ஸ் வண்டிகள் வேறு வாகனங்கள் என பெருமளவான வாகனங்களில் காயக்காரர்கள் வருவதும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்குக் கொண்டு போவதுமாக அன்றைய செயற்பாடுகள் இருந்தன.

இப்படியே அரைமணித்தியாலங்களுக்கு மேலாக நின்று ஒவ்வொரு காட்சிகளையும் வீடியோ கமராவுக்குள் புகுத்திக்கொண்டு முல்லைத்தீவுப் பகுதிக்கு செல்வதற்காகப் புறப்பட்டுப் போனோம்.

புதுக்குடியிருப்புச் சந்திக்குப் போன பொழுது வழமையைவிட சனநெரிசலாய் இருந்தது. அதுக்குள்ளாலும் போய்க் கொண்டிருந்தபொழுது புதுக்குடியிருப்பு வைத்தியசாலைப் பக்கம் பார்த்தோம். சனக்கூட்டம் நிரம்பிவழிந்து கொண்டிருந்தது. அதனால் வைத்தியசாலைக்குள் கமராவுடன் போனோம்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் கண்டதைவிட முற்றிலும் மாறுபட்ட காட்சிகள் தான் இங்கே இருந்தது.காயப்பட்டவர்கள் ஒருபுறம் வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். அதேபோல தங்கள் உறவுகளைத் தேடியபடி கதறி அழுதுகொண்டு அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள்.

இவற்றையெல்லாம் காட்சிபடுத் தியபடி வைத்திய சாலையின் விடுதிகளுக்குள் போனோம். என்ன செய்வதென்றே தெரியவில்லை. இரண்டு விடுதிகள்

### முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

முழுவதும் உயிரிழந்தவர்களின் உடல்கள் அடுக்கப்பட்டிருந்தன. உடல்கள் ஒவ்வொன்றையும் பார்க்கின்ற பொழுது வேதனையாக இருந்தது.

உடல்களைக் கண்ட உடன் எப்பிடியும் முல்லைத்தீவுக்குப் போகவேணும் என்ற துடிப்பு எனக்குள் வலுவானது. அப்பிடியே வட்டுவாகல் பாலத்தடியால போய் செல்வபுரம் றோட்டால படப்பிடிப்புச் செய்த படி போய்க்கொண்டிருந்தோம் மீட்பு நடவடிக்கைகள் மிகவேகமாக நடந்து கொண்டிருந்தன. மீட்புப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் ஒவ்வொரு உடல்களையும் சுமந்தபடி ஓடிக்கொண்டிருந்தனர். அவ்வளவு வேகமாக அவர்களின் செயற்பாடுகள் இருந்தன.

எங்கும் இடிபாடுகளும், சிதைவுகளும், மனித உடல்களும் தான் இருந்தது. எதைப்படம் பிடிப்பது என்றே தெரியாமல் இருந்தது. எல்லாமே காட்சிப்படுத்தப்பட வேண்டியதாய் தான் இருந்தது. எங்கு திரும்பினாலும் எல்லாமே நெஞ்சை உலுக்கும் காட்சிகளாகத்தான் இருந்தது. சிலர் தமது உறவுகளைத்தேடிக் கதறியபடி தேடிக் கொண்டிருந்தார்கள். எல்லாமே பயங்கரமாய் இருந்தது.

இப்படியான படப்பிடிப்புக்கள் எதையும் நான் இதுவரை செய்ததே இல்லை. எங்கும் மரணித்த உடல்களும், அதனைத் தூக்கி அழுதுகொண்டிருக்கின்ற உறவுகளும், இடிந்த கட்டடங்களும் சிதைந்து உருக்குலைந்து போன நிலையில் ஒரு வித்தியாசமான பயங்கரமான வர்ணிக்கமுடியாத மனப்பயத்தை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு சம்பவங் களையும் தத் துருவ மாக காட்சிப்படுத்துவதா? அல்லது இதனைத் தூக்கி எறிந்துவிட்டு மீட்பு வேலைகளில் தீவிரமாக இறங்குவதா? எதைச் செய்வது என்று தெரியாமல் இருந்தது எல்லாமே குழப்பமாகத்தான் இருந்தது.

ஏற்கனவே செந்தளிர் சிறுவர் இல்லத்துக்குப் பலதடவை போயிருக்கின்றோம். படப்பிடிப்புகள் செய்திருக்கிறோம். அந்த இடத்துக்குப் போய் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. ஆனால் அந்தக் கட்டடமே இருந்த இடம் இல்லாமல் இருந்தது. மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. பச்சிளம் பிஞ்சுச் சிறுவர்களை நினைத்து மனம் வேதனையால் துடித்தது. கடல் வருவதும் போவதுமாக இருந்தது.

அதனால் திரும்பி வட்டுவாகல் பாலத் தடிக்கு வந்து பின் தார் வீதியால் முல் லைத்தீவை நோக்கிப் போனோம். விளையாட்டு மைதானத்தடியால் பெருமளவு தண்ணி வருவதும் போவதுமாக இருந்தது. அதனால் உள்ளே போக முடியாமல் இருந்தது. கயிறு கட்டி அதில் பிடித்தபடி கடற்படை அண்ணாக்கள் தான் போய்க் கொண்டிருந்தினம் அதால நாங்கள் புதுக்குடியிருப்புக்குத் திரும்பி வந்து முள்ளியவளைக்குப் போனம்.

அங்கபோய்ச் சேர்ந்தவுடன சனங்கள் எல்லாம் சோகத்தில் கதறி அழுது கொண்டிருந்தினம். எல்லாருமே திகைத்துப் போய் இருந்தார்கள். எல்லா சம்பவங்களுமே என் மனதை ஆழமாக ஊடுருவித் தாக்கி விட் டது. அந்த மக்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் போல இருந்தது.

வித்தியானந்தா பாடசாலைக்கு சடலங்கள் வந்து குவிந்து கொண்டிருந்தது. எல்லாக் காட்சிகளும் ஏற்க முடியாதனவாகத் தான் இருந்தது. சம்பவங்களை ஆவணமாக்க வேண்டும் என்பதற்காக மனமின்றி கமராவுக்குள் புகுத்திக்கொண்டோம். எத்தனை அழகிய காட்சிகளுக்கு இந்தக் கடலை கமராவுக்குள் புகுத்தியிருப்போம். அந்தக் கடல் இத்தனைகொடுமையைச் செய்து ஊரையே அழித்துவிட்டது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது.

சில நேரங்களில் படம் எடுத்துக் கொண்டு போகின்றபோது சில உடல்களில் உயிர் இருப பது போல இருக்கும் அந்த இடத்தில் ஒரு கையில் கமறாவை வைத்துக்கொண்டு மற்றக் கையால் உடல்களை வெளியால் எடுத்து உயிர் இருக்கிறதா? இலலையா?என்பதைப் பார்த்தோம இப்படியாக அன்றைய பொழுது வேதனை யுடன் கழிந்து போனது என்றார் நிதர்சனம் மகளிர் பிரிவுப்போராளி இ. குயிலினி.

சுனாமிக் கடற்பேரலைகள் எழுந்து ஊரையும் உறவுகளையும், உடமைகளையும் ஒன்றாய் சில நிமிடங்களில் காவுகொண்ட சமயம் அதிலிருந்து எதிர்பாராத விதமாக தப்பிய மக்களின் உளநல மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு பல்லாயிரம் மக்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கிய மதகுரு ஒருவர் தாம் இந்தப் பாரிய பணியில் எதிர்கொண்ட சவால்கள் பற்றி பகிர்ந்தார். அவர் பகிர்ந்தவை அடுத்த பகுதியில்.



தொடரும்....

- அம்பலாங்கொடைப் பகுதியில் -

# சுனாமி நிவாரணப்பொருட்கள் விநியோகத்தில் பாகுபாடு காட்டப்பட்டதற்கெதிராக ஆர்ப்பாட்டம்

சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப்பொருட்கள் முறையாக வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அம்பலாங்கொடையில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. 18 படகுகளையும் கடற்றொழில் உபகரணங்களையும் இரண்டு வெளிநாட்டவர்கள் இந்தப் பிரதேசத்திற்கு வழங்குவதற்கென வந்திருந்தபோதே இவ்வாறு தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

இது பற்றி மேலும் தெரியவருகையில் அம்பலாங்கொடை கடற்றொழில் துறை முகத்தில் படகுகளும் உபகரணங்களும் வழங்கப்பட ஏற்பாடாகியிருந்தது. அவ்வேளை அங்கு பிரச்சினை தோன்றியபோது அதனை நீக்கும் முகமாக பொலிசார் அங்கு அழைக்கப்பட்டனர். பின்னர் குறிப்பிட்ட நிவாரணப் பொருட்கள் அம்பாலங்கொடை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு வைத்து விநியோகிக்க பொலிசார் முயன்றனர். ஆனால் பலனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வேளையில் இப்பொருட்களை விநியோகிப்பதில்லையென மேற்குறித்த வெளிநாட்டவர்கள் இருவரும் தீர்மானித்ததாக பொலிசார் கூறினர்.

# அரசு–புலிகளுக்கிடையிலான பொதுக்கட்டமைப்பு உருவானால் ஜே.வி.பி. கடுமையாக எதிர்க்கும்

### - ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக புலிகளுடன் அரசு இணக்கத்திற்கு வருவதை ஜே.வி.பி. தொடர்ந்தும் கடுமையாக எதிர்க்கும் என்று ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகரன் நேற்று முன் தினம் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அழிவு தொடர்பான நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக் கட்டமைப்புக் குறித்து அரசும் விடுதலைப்புலிகளும் இணக்கம் கண்டாலும் அதற்காக அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறிவிடாதென்றும், அதற்கான உத்தரவாதம் தமக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் தெரிவித்த கருத்தில் உண்மையில்லை.

ஜே.வி.பியின் உயர்மட்டத்தலைவர்கள் எவரும் அவ்வாறான உறுதிமொழியை வழங்கவில்லை.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் சனநாயக ரீதியாக மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களல்லர் வடக்கு -கிழக்கின் ஒரு சிறிய பிரதேசமே அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. பெரும்பாலான பிரதேசம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கி அதில் கூடுதலான வீத அங்கத்துவத்தை விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதை நாம் ஆட்சேபிக்கின்றோம்.

இவ்வாறான பொதுக்கட்டமைப்பொன்று உருவாகுவதன் மூலம் வடக்குக்கிழக்கில் பெரும்பான்மையான அதிகாரம் தமக்கிருக்கின்றதென்பதை சர்வதேச சமூகத்திற்கு காண்பிப்பதற்கும். தாம் பலவீனமான நிலையில் இல்லையென்பதை சித்திரிப்பதற்குமாகவே விடுதலைப் புலிகள் இந்தப் பொதுக்கட்டமைப்பை பெரிதும் விரும்புகின்றனர். எனவே அவ்வாறான நோக்கங்களைக்கொண்ட மக்களை அடிமைப்படுத்தக்கூடிய திட்டத்தை ஜே.வி.பி. முழுமையாக ஆட்சேபிக்கின்றது. பொதுக்கட்டமைப்பு உருவானால் ஜே.வி.பி.சில பாராதூரமான முக்கிய தீர்மானங்களை எடுக்கும் என்று கூறியுள்ளது..

# ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் ஹெய்ட்டியிலிருந்து சிறில.படை விலகாது

### -இராணுவப் பேச்சாளர் தயாரத்நாயக்க தெரிவிப்பு

ஹெய்ட்டி நாட்டிற்கு சென்று பணியாற்றும் சிறிலங்காப் படை வீரர்கள் திருப்பி அழைக்கப்படமாட்டார்கள் என சிறிலங்கா இராணுவம் அறிவித்துள்ளது.

சர்வதேச அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சென்ற படைவீரர்கள் ஒப்பந்தத்திற்கமைய அங்கு தொடர்ந்தும் பணியில் ஈடுபடுவார்கள் என சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிக்கேடியர் தயாரத்நாயக்க தெரிவித்துள்ளார். அங்கு பணியாற்றச் சென்ற இராணுவ வீரர்கள் இருவர் உயிரிழந்ததையடுத்து வீரர்களைத் திருப்பியழைக்குமாறு ஜே.வி.பி. கூறியிருந்தது. இவர்கள் திருப்பியழைக்கப்படுவார்களா? எனக் கேட்கப்பட்ட போதே பிரிகேடியர் இவ்வாறு கூறினார். ஆறு மாத ஒப்பந்த அடிப்படையில் 750 இராணுவ வீரர்கள் ஹெய்ட்டியில் பணியாற்றச் சென்றுள்ளனர். ஆறு மாதங்களின் பின்னரே அவர்கள் நாடு திரும்புவர். அதன்பின் அவர்களுக்குப் பதிலாக மேலும் 750 வீரர்களை அனுப்ப ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பதாகவும் பிரிகேடியர் ரத்நாயக்க தெரிவித்தார். அமைதிப்படையில் பணியாற்றும் காலத்தில் யுத்தத்தில் ஒரு வீரர் உயிரிழந்தால் 50 ஆயிரம் டொலர்கள் நட்டஈடாக வழங்கப்படுவதுடன், ஒருவர் காயமடைந்தால் இராணுவ விதிகளுக்கமைய ஐக்கிய நாடுகள் அமைப்பினால் குறிப்பிட்ட ஒரு தொகை நட்டஈடாக வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# சிறிலங்காவில் நீதிமன்ற நடைமுறைகளை மும்மொழியிலும் நடைமுறைப்படுத்த வலியுறுத்து

சிறிலங்காவின் தலைமை நீதிமன்ற நடவடிக்கைகளில் நாட்டின் ஆட்சி மொழிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளிலும் இருக்க வேண்டுமென்று சிறிலங்காவின் பாராளுமன்றம் வலியுறுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் அரசு கொறாடாவும் வர்த்தகத்துறை அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இது தொடர்பான பிரச்சினையை பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். தலைமை நீதிமன்ற நடைமுறைகள் ஆங்கிலத்தில் இருப்பதால் மக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் மொழிச் சிக்கலை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார். எதிர்க் கட்சி கொறாடா மகிந்த சமரசிங்கவும் இப்பிரச்சினையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் ஒத்துழைப்பதாகவும், நீதிமன்ற நடைமுறைகளை மும்மொழிகளிலும் நடைமுறைப்படுத்தக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இது குறித்துப் பதிலளித்த பாராளுமன்ற அவைத்தலைவர் லொக்கு பண்டார இப்பிரச்சினையை நீதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாகக் கூறினார்.


## Job Opening Female Translator

### (Tamil- English - Tamil)

**Medecins du Monde -France**
**Mallavi Hospital Project**
**Mullaitivu District**

Seeking Female translator (tamil to English to Tamil )For Help with the medecins du monde France (International NGO) project at the mallavi hospital in mallavi ,mullaitivu District.the translator will work primarily with the midwife but would also help the rest of our medical team. opening immediately. please send CV and bio data to christi Denton, c/o MDM, Mallavi Hospital, Mallavi.

(5884)


# பழைய ஓய்வூதியத்திட்டம் மீண்டும் அறிமுகமாகும்

### - நிதித்துறை பிரதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

ரத்துச் செய்யப்பட்டிருக்கும் ஓய்வூதியத்திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளதாக சிறிலங்கா நிதித்துறை பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாவபிட்டிய தெரிவித்துள்ளார்.

பழைய ஓய்வூதியமுறையை மீண்டும் செயல்முறைப்படுத்துவது தொடர்பாக தொழிற்சங்க பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

~அமைய அடிப்படையில் கடமையாற்றும்~

# அரச உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

(வவுனியா செய்தியாளர்)

அரசசேவையில் அமைய அடிப்படையில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. நாடு முழுவதும் அமைய அடிப்படையில் 32 ஆயிரம் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் 160 நாட்கள் அரச சேவையில் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (10)

# வவுனியா அங்காடி வியாபாரிகளின் பிரச்சினை குறித்து ஆராய்வு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா அங்காடி வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று கடந்த புதன் பிற்பகல் 5.00 மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.அச்சுதன், வவுனியா நகரசபை செயலாளர் சரவணபவன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வன்னிமாவட்ட தலைவர் கே.ஏ.செந்தில்நாதன், வவுனியாவர்த்தக சங்கத்தலைவர் ஜனாப், பி.எஸ்.அப்துல்லா அங்காடிவியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது அங்காடி வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலம் தற்காலிகமானது எனவும் அவர்களுக்கென ஒரு இடம் தெரிவுசெய்யப்பட்டு நிரந்தரமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து ஆராயப்பட்டது.(10)

# க.பொ.த (உ/த) கணித/ விஞ்ஞான மாணவர்களுக்கான செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பினரால் 2005 க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள கணித,விஞ்ஞான,பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு 19 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி பாடசாலையில் ஆசிரியர் அன்பழகன் அவர்களால் இரசாயனவியல் பாடத்திற்கான செயலமர்வு 20 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு உயிரியல் பாடத்திற்கான செயலமர்வு ஆசிரியர் அல்போன்ஸ் அவர்களாலும் நடாத்தப்பட்டது. அத்துடன் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள முல்லை வலய கணித,விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான விசேட செயலமர்வு கடந்த ஞாயிறு மாலை 2.30 மணிக்கு வித்தியானந்தாக் கல்லூரியில் இரசாயனவியல் பாடத்திற்கான செயலமர்வும் நடாத்தப்பட்டது.

இவ்விரு இடங்களிலும் பெருமளவான மாணவர்கள் கலந்து பயன் பெற்றார்கள் என்பது குறிப்பித்தக்கது. இவ்வாறான செயலமர்வுகள் தொடர்ச்சியாக தமிழீழ மாணவர் அமைப்பினரால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இனிவரும் காலங்களில் ஏனைய வகுப்பு மாணவர்களுக்கும் இவ்வாறான கருத்தரங்குகள் நடாத்தப்படும் என்பதனையும் தமிழீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்துக் கொள்கின்றனர். (சோ)


## சந்தோசம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நலிவுற்றோர் நல வாழ்வுத்திட்டத்திற்காக நடாத்தப்பட்ட சந்தோசம் 02 அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசுப் பெற்ற இலக்கங்கள்.

**01 ஆம் பரிசு இல - 15827**
**02 ஆம் பரிசு இல - 7602**
**03 ஆம் பரிசு இல - 10936**

**10 ஆறுதல் பரிசு இலக்கங்கள்**

| | |
|---|---|
| 01. 9303 | 06. 9197 |
| 02. 18138 | 07. 10950 |
| 03. 16416 | 08. 9048 |
| 04. 12131 | 09. 8730 |
| 05. 10975 | 10. 7677 |

மேற்படி பரிசுக்குரியவர்கள் 25.052005 இற்கு முன்னதாக தங்களுக்குரிய பரிசினைக் கீழ் குறிப்பிட்ட முகவரில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

(சி-11586)

சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச் செயலகம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

# மன்மோகன்சிங்கை சந்திக்கும் போது காஷ்மீர் பிரச்சினையை எழுப்புவேன்

## -பாகிஸ்தான் அதிபர் முஷாரப்

(புதுடில்லி)

**“இந்தியா சென்று மன்மோகன் சிங்கை சந்திக்கும்போது காஷ்மீர் பிரச்சினை பற்றிக் கதைப்பேன்” என பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் தெரிவித்திருக்கிறார்.**



முஷாரப்

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இந்தியாவில் நடந்து வரும் கிரிக்கெட்போட்டியைக் காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் விருப்பம் தெரிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து அவருக்கு மத்தியஅரசு முறைப்படி அழைப்பு விடுத்தது.

அதை ஏற்று வரும் 17ஆம் திகதி டில்லியில் நடக்கும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியைக் காண வருவதாக முஷாரப் அறிவித்தார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் பேட்டி அளித்தார். பேட்டியில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

2004 செப்ரெம்பர் மாதம் நியூயோர்க்கில் ஐ.நா.சபை கூட்டத்துக்கு வந்தபோது சந்தித்துக் கொண்ட நானும், பிரதமர் மன்மோகன்சிங்கும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண உறுதியெடுத்து இருந்தோம். எனவே அந்தப்பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்து வழிகளையும் கையாளவேண்டும். காஷ்மீர் பிரச்சினைக்குத்தீர்வு காணாவிட்டால் ஸ்ரீநகர்-முசுபராபாத் பஸ் போக்குவரத்து போன்ற நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் நம்பிக்கை இழந்துவிடும்.

நம்பிக்கை ஊட்டும் நடவடிக்கைகளும், காஷ்மீர் பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தையும் ஒருசேர நடக்க வேண்டும். ஆனால் நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் அதிகமாக இருக்கின்றன. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண அதிக முயற்சி எடுக்கப்படவில்லை.

நான் இந்தியா- பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைக் காண ஏப்ரல் 17ஆம் திகதி டில்லி செல்லும் போது பிரதமர் மன்மோகன்சிங் சந்திப்பில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்புவேன்.

அந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கண்டே ஆகவேண்டும். பல்வேறு பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடக்கிறது. அதில். தீர்வு ஏற்படும் என நம்புகிறேன். காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் நடக்கின்றன. அது வேதனை அளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.



தமிழ்பாதுகாப்பு இயக்கத்தின் மூன்றாவது மொழிப்போர் மாநாடு திருச்சியில் நடைபெற இருப்பதையொட்டி பொன்மலை ஜி.கார்னரிலுள்ள மாநாட்டுத்திடலை நேற்று முன்தினம் மதியம் பா.ம.க. தலைவர் கோ.க.மணி பார்வையிட்ட காட்சி.

# கர்நாடகத்திலும் சமாஜ்வாடி கட்சி!

(கர்நாடகம்)

கர்நாடகவில் சமாஜ்வாடி கட்சி நேற்றுமுன்தினம் தொடங்கப்பட்டது. அந்தக்கட்சியின் மாநிலத்தலைவராக முன்னாள் முதல்வர் பங்காரப்பா நியமிக்கப்பட்டுள்ளார். தொடக்க விழாவில் சமாஜ்வாடி கட்சி தேசியத் தலைவர் முலாயம் சிங்யாதேவ் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அவ்பேசுகையில், காங்கிரஸ், பா.ஜ. மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். 3ஆவது அணியை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அவர்களின் எதிர்பார்ப்பை சமாஜ்வாடி நிறைவேற்றும் என்று கூறினார். சமாஜ்வாடி கட்சித் தொடக்கத்தை முன்னிட்டு பெங்களூரில் நேற்றுப் பேரணி நடைபெற்றது. இதில் பிரபல நடிகைகள் ஜெயப்பிரதா, ஜெயாபச்சன் மற்றும் சமாஜ்வாடி பொதுச் செயலாளர் அமரசிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



கர்நாடக மாநிலத்தில் சமாஜ்வாடி கட்சி தொடக்க விழா பெங்களூரில் உத்தரப்பிரதேச முதல்வர் முலாயம் சிங்யாதேவ் முன்னிலையில் நடந் தது. அருகில் பங்காரப்பா (இடது) மற்றும் அமர்சிங் (வலது)

# அமெரிக்காவின் போர் விமானங்கள் பாகிஸ்தானுக்கு கண்டனம் தெரிவித்தார் இந்தியப் பிரதமர்

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா போர் விமானங்கள் வழங்குவது தொடர்பாக தனது கண்டனத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ். டபிள்யூ புஷ்ஷிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் புஷ் நேற்று முன்தினம் மாலை 4.15 மணியளவில் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தொலைபேசியில் பேசினார். சுமார் 15 நிமிடநேரம் அவர்கள் பேசினார்கள். இந்தத் தொலைபேசி உரையாடலின்போது பல்வேறு பிரச்சினைகள் குறித்து புஷ், மன்மோகன்சிங் ஆகியோர் விவாதித்தார்கள். அப்போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா நவீன எப்-16 போர் விமானம் விற்க முடிவு செய்திருக்கும் தகவலை மன்மோகன்சிங்குக்கு புஷ் தெரியப்படுத்தினார். அதைக்கேட்டு மன்மோகன்சிங் அதிருப்தி அடைந்தார். அமெரிக்காவின் இந்தமுடிவு இந்தியாவுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. நவீன எப்-16 போர் விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு விற்பதால் தெற்காசிய பிராந்தியத்தின் பாதுகாப்புச் சூழ்நிலைக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் எதிர்மறையான விளைவுகள் உருவாகும் . என மன்மோகன்சிங் கவலை தெரிவித்தார். அதையடுத்து புஷ் மன்மோகன்சிங் இடையிலான தொலைபேசி உரையாடல் முடிவடைந்தது. அமெரிக்கா 1980 ஆம் ஆண்டுகளில் 111 எப்-16 போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்கியது. 1983-1987ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மேலும் 40 எப்-16 விமானங்களை அளித்தது. அதன்பின் மூன்று ஆண்டுகள் கழித்து பாகிஸ்தான் அணுகுண்டு வெடித்து சோதனை செய்ததால் எப்-16 விமானத்தை அந்த நாட்டுக்கு அளிக்க அமெரிக்கா தடைவிதித்தது. தற்போது அந்தத்தடையை விலக்கிக் கொண்டு மீண்டும் போர்விமானம் விற்க அமெரிக்கா முடிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதி ஆட்சியால் பீகார் சிறக்கிறது

பீகார் மாநிலத்தில் சனாதிபதி ஆட்சி அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகச் செய்தி ஊடகம் ஒன்று கூறுகிறது. தனி இராட்சியம் நடத்தி வந்த அரசியல்வாதிகள். லஞ்சத்தில் குளித்த பொலிஸ் அதிகாரிகளின் அராஜகம் ஒழிக்கப்பட்டு நகரமே அமைதியாகக் காணப்படுகின்றது. பாட்னா தெருக்களில் ஒழுங்கான முறையில் குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தமாகக் காணப்படுகிறது என அது மேலும் தெரிவிக்கிறது.

# கொள்ளையர் கொலை

(சென்னை)

சென்னை நகரில் கொள்ளை, கொலை போன்றவற்றில் ஈடுபட்டு வந்த ஒருவரை சென்னைப் பொலிசார் நேற்றுக் காலை சுட்டுக்கொன்றுள்ளனர்.

கடந்த சில நாட்களிற்கு முன் பொலிசாரால் விடுதலை செய்யப்பட்ட மேற்படி நபர் மீண்டும் தனது கைவரிசையைக்காட்ட தொடங்கினார்.அதைத்தொடர்ந்து பொலிசார் அவனை மடக்கிப்பிடிக்க முயன்ற வேளை தப்பியோடியவரை பொலிசார் துரத்திச்சுட்டதில் கொள்ளையர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்.

# அந்தமானில் மீண்டும் நிலநடுக்கம் மக்கள் பதறியடித்து ஓட்டம்

(அந்தமான்)

அந்தமான் தீவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் பதறியடித்துப் பாதுகாப்பான இடம் நாடி ஓடியுள்ளனர்.

கடந்தவருடம் டிசம்பர் 26 ஆம் திகதி இந்தோனேசிய கடல் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் எழுந்த சுனாமி அலைகள் இந்தியாவில் அந்தமான் நிக்கோபார்தீவுகளில் அதிகப்பட்சமான சேதத்தை ஏற்படுத்தின. அதன் பிறகு இதுவரை 200 இற்கும் மேற்பட்ட முறை அந்தமானில் நிலநடுக்கம் ஏற்பட்டுளது. கடந்த இரு வாரமாகத்தான் அங்கு நிலநடுக்கம் இல்லாமல் அமைதியான சூழல் நிலவியது. இப்போது தான் அந்தமான் மீண்டும் பழைய நிலைக்குத் தயாராகிக் கொண்டு இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் அந்தமானில் நிலநடுக்கம் ஏற்பட்டது. கிரேட் நிக்கோபார் தீவுகளை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள வீடுகள் குலுங்கின. வீட்டினுள் இருந்த பொருட்கள் உருண்டு விழுந்தன. மக்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தனர். நேற்று முன்தினம் காலை 6.35 மணி அளவில் இந்த நிலநடுக்கம் நிகழ்ந்தது. இது ரிச்டர் அளவு கோலில் 5.4 ஆகப் பதிவானது. இதனால் மக்கள் பெரும் பீதியடைந்தனர். இதே போல் சுமாத்திராத் தீவிலும் நேற்று முனதினம் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

# நாகலாந்து மத்திய பிரதேசம் பூகம்பத்தால் அதிர்ந்தது

நாகலாந்து மற்றும் மத்திய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு பூகம்பம்தாக்கியது. நாகலாந்து மாநிலத்தில் இந்தியா- மியான்மர் எல்லைப் பகுதியில் இரவு7.05 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவு கோலில் 5.2 புள்ளி பதிவாகி இருந்தது. இதில் மிகவும் அதிக சக்தி வாய்ந்த ஒன்று. பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து இதுவரை எந்தவித தகவலும் வரவில்லை. இருப்பினும் பூகம்பத்தின் அளவு அதிகமாக இருப்பதால் வீடு மற்றும் கட்டடம் இடி விழுந்து பலர் காயமடைந்து இருக்கலாம.

நாகலாந்தைத் தாக்கிய சிறிது நேரத்தில் இரவு 7.34 மணிக்கு மத்திய பிரதேசத்தில் பூகம்பம் ஏற்பட்டது. அங்குள்ள ஹோ சங்காபாத் மற்றும் பீத்தல் மாவட்டங்களில் பூகம்பம் மையம் கொண்டு இருந்தது. ரிச்டர் அளவு கோலில் 3.7 புள்ளி எணப் பதிவாகி இருந்தது.

இந்த அதிர்வால் மத்திய பிரதேசத்தில் உயிர்ச்சேதம் அல்லது பொருள்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜெயலலிதாவிற்கு எதிராக கருணாநிதி குற்றப்பத்திரிகை அனுப்பினார்

(சென்னை)

மத்திய அமைச்சர்களைக் குறை கூறி முதல்வர் ஜெயலலிதா கடந்த 20 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை தொடர்பாக தலைமைச் செயலருக்கும், செய்தி விளம்பரத்துறைக்கும் கருணாநிதி சார்பில் அவரது வழக்கறிஞர் ஆர். விடுதலை குற்றப்பத்திரிகை அனுப்பியுள்ளார். மத்திய அமைச்சர்களையும் கருணாநிதியையும் அவதூறு செய்யும் முதல்வரின் அறிக்கை அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி செய்தி விளம்பரத்துறை சார்பில் வெளியிடப்பட்டிருப்பது தவறு இதற்கு தலைமைச் செயலர் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரவேண்டும் செய்தி விளம்பரத்துறை இயக்குநர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையெனில் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்று அந்தப் பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தூஸ்ரா பந்துவீச்சைப் பயன்படுத்தி விக்கெட்டுக்களை வீழ்த்தினேன்



-ஹர்பஜன்-

பாகிஸ்தானுக்கு எதிராக தூஸ்ரா வகைப் பந்து வீச்சைப் பயன்படுத்தி விக்கெட்டுக்களைக் கைப்பற்றினேன் என்று ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்திய இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது, தூஸ்ரா வகைப் பந்து வீச்சை விதிமுறைக்கு மாறாக வீசியதாக ஹர்பஜன்சிங் மீது போட்டி நடுவர்கள் ஐ.சி.சியிடம் புகார் செய்தனர்.

இந்த நிலையில் பல்வேறு பிரச்சினைக்கு இடையில் பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் ஹர்பஜன்சிங் சிறப்பாக பந்து வீசி ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தூஸ்ரா வகைப் பந்து வீச்சை பயன்படுத்தியே விக்கெட்டுக்களை கைப்பற்றினேன் என்று ஹர்பஜன்சிங் கூறியுள்ளார். தூஸ்ரா வகை பந்துவீச்சு குறித்த புகார்கள் பற்றி நான் கவலைப்படவில்லை. இதற்காக நான் தூஸ்ரா பந்து வீச்சை கைவிடமாட்டேன் என்றார்.

## பெங்களூர் டெஸ்ட்; சேவாக் இரட்டைச் சதம்
## ஓட்டக் குவிப்பில் இந்தியா முன்னேற்றம்

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பெங்களூரில் நடைபெற்றுவரும் இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணியும் பாகிஸ்தானுக்கு நிகரான ஓட்டங்களைக் குவித்து வருகிறது.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்றைய நிறைவில் இந்தியா தனது முதலாவது இன்னிங்சிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 379 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீர் வீரேந்திர சேவாக் இரட்டைச் சதம் அடித்து இந்திய ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தார். அவர் 201 ஓட்டங்களைப் பெற்று





ஆட்டமிழந்தார்.

இவரைவிட லக்ஸ்மன் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கனேரியா மூன்று விக்கெட்டுக்களையும், சமி இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.பாகிஸ்தானைவிட 191 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ள இந்தியா இன்று தொடர்ந்து ஆடும். பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்சில் 570 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சாதனைக்காக ஆடவில்லை வெற்றிக்காகவே ஆடினேன்



-யூனிஸ்கான்-

'சாதனைக்காக ஆடவில்லை. அணியின் வெற்றிக்காகவே ஆடினேன்' என்று இரட்டைச் சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் யூனிஸ்கான் கூறினார்.

300 ஓட்டம் சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் நான் ஆடவில்லை. இந்த டெஸ்டில் வெற்றி பெற்று தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் அடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் தான் ஆடினேன்.

எனது தனிப்பட்ட சாதனைக்காக ஆடவில்லை. அணியின் வெற்றிக்காகவே ஆடினேன். இரண்டாவது நாள் ஆட்டத்தின் போது ஏழு அல்லது எட்டு மணி நேரம் நாங்கள் துடுப்பாட்டம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம்.

மேலும் நிலைத்து நின்று ஆடவேண்டும் என்பதில் குறியாக இருந்தோம். பெங்களூர் ஆடுகளத்தில் தவறு செய்யாமல் ஆடினால் தொடர்ந்து நின்று ஆடலாம்.

இரட்டைச் சதம் அடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவின் முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தி ராசியின் உதவியுடன் நாங்கள் வெற்றி பெறுவோம் என்றார்.

## 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்து சுற்றுப் போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டியொன்றை நடத்தவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த உதைப்பந்தாட்ட லீக்குகளுக்கான பருத்தித்துறை லீக், வலிகாமம் லீக், யாழ்ப்பாணம் லீக் அணிகளுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.தற்போது இடம் பெற்றுவரும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் மின்னொளியில் இடம் பெறும் போது சுழற்சி முறையில் இவ் ஆட்டங்களும் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (41)




## யாழ்.மாவட்ட வி.துறை நடாத்தும் இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப் படை மாவீரர் நினைவாகவும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு,

யாழ். லீக்கைச் சேர்ந்த நிக்லஸ் வி.கழகம் எதிர் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த டயானா வி.கழகம், யாழ் லீக்கைச் சேர்ந்த பாசையூர் சென் அன்ரனிஸ் வி.கழகம் எதிர் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அராலி ஐக்கிய விளையாட்டு கழகம்.

தென்மராட்சி வி.கழகம் எதிர் யாழ். லீக்கைச் சேர்ந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி. (41)

## வவுனியா கோட்ட விளையாட்டுப் போட்டி

வவுனியா கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி கடந்த செவ்வாயன்று பிற்பகல் 2.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

வவுனியா கோட்டக் கல்வி அலுவலர் திரு. வீ. கணேசராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அன்ரன் சோமராஜா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஜனாப், கமால், திருமதி. மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் 231 புள்ளிகளைப் பெற்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முதலாம் இடத்தினையும், 194 புள்ளிகளைப் பெற்று சைவப்பிரகாச மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினையும், 166 புள்ளிகளைப் பெற்று இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன. (10)



சியோல், சுவோனில் நடந்த இளைஞர்களுக்கான சர்வதேச கால்பந்து போட்டியில் ஆர்ஜென்டினா 4-0 என்ற கோல் கணக்கில் எகிப்தை தோற்கடித்தது. பாய்ந்து வரும் பந்தை தலையால் முட்டித்தள்ள முற்படுகிறார் ஆர்ஜென்டினா வீரர் நிகோலஸ் டொமிங்கோ. (இடது)

## பயிற்சிப் பாசறை

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து வருகை தந்த தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் ஜெகதீஸ்வரன் முரளிதரன் நேற்று முன்தினம் வலிகாமம் பகுதி பாடசாலைகளில் பயிற்றுநர்களாக இருப்பவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி பாசறையொன்றை நடத்தினார்.

சுன்னாகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற இப்பயிற்சிப் பாசறையில் பல புதிய விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டதாகக் கலந்து கொண்டவர்கள் கூறினார்கள்.

இவர் வேல்ஸ் கிரிக்கெட் அபிவிருத்திச் சபையில் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கதாகும். (41)

## சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள்

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினரின் ஏற்பாட்டில் மாபெரும் சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளானது அடுத்தமாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன. இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்கள் மட்டும் பங்குபற்ற முடியும் எனவும், இப்போட்டிக்கான பதிவுகளை வலயக்கல்விப்பணிமனையில் பதிவு செய்து கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினர் கேட்டுக்கொள்கினறனர். (கு)

## சென் பீற்றர்ஸ், சென் அன்ரனீஸ் அணிகள் வெற்றி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் நவாலி சென்பீற்றர்ஸ் வி.கழகமும் பாசையூர் சென் அன்ரனிஸ் வி.கழகமும் வெற்றி பெற்றன.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்த வரோதயாக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன. (41)

## இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
## பலவீனமான நிலையில் நியூசிலாந்து



நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஒக்லாந்தில் நேற்று ஆரம்பமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

இதன்படி முதலில் ஆடிய நியூசிலாந்து 15 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டையும், 53 ஓட்டங்களுக்கு இரண்டாவது விக்கெட்டையும் இழந்தது. பின்னர் அணித் தலைவர் பிளெமிங், மார்சல் இணை சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

துடுப்பாட்டத்தில் மார்சல் 76, பிளெமிங் 65 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் கிளெஸ்பி இரண்டு விக்கெட்டுக்களையும், மெக்ராத், கஸ்பரோவிச், வோர்ன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## அக்தரை அணியில் இணைக்க இன்சமாம் எதிர்ப்பு தெரிவிப்பு



மிகவும் மோசமாக நடந்து கொள்வதால் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தரை அணியில் சேர்க்க வேண்டாம் என்று பலமுறை வலியுறுத்தியுள்ளேன் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையே நீண்ட காலமாக பனிப் போர் இருந்து வந்தது. 15 மாதங்களாக இப்பிரச்சினை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது அக்தரை அணி யில் சேர்க்க வேண்டாம் என வலியுறுத் தியது ஏன் என்பது குறித்து இன்சமாம் கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் வெளியாகும் 'தி நியூஸ்' தினசரியில் வெளியான செய்தியில் இன்சமாம் கூறியதாவது;

அக்தரை அணியில் சேர்க்க வேண்டாம் என்று அணித் தேர்வுக் குழு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் பல முறை கூறியுள்ளேன். அக்தரின் மோசமான நடவடிக்கையால் இளம் வீரர்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு கூறினேன்.

ஒரு போட்டியில் சிறப்பாக பந்து வீசுவார். அதை வைத்துக் கொண்டே இரண்டு ஆண்டுகளுக்கு விளையாடுவார். கடந்த இரண்டு ஆண்டுகளில் அவருடைய பந்து வீச்சை கவனித்தால் இது தெரியும். ஒரு போட்டியில் சிறப்பாக பந்து வீசி விக்கெட்டுக்களை வீழ்த்திவிட்டால் உடனே உடல் நிலை சரியில்லை என்று சில போட்டிகளில் விளையாடமாட்டார்.

அதனால் அவர் அணியில் இடம்பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு செயற்கையாக ஏற்படுத்தப்படுகிறது.அணிக்கு எப்போது தேவையோ அப்போது தனது பங்களிப்பை அவர் அளிப்பதில்லை. தனிப்பட்ட முறையில் அக்தருடன் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், கிரிக்கெட் ஒழுக்கம் என்பது அவரிடம் குறைவாக உள்ளது.


தனிப்பட்ட முறையில் விளையாடுவதை ஏற்க முடியாது.

சொகைப் அக்தர் மிகச் சிறந்த வீரர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், விளையாட்டு ஒழுக்கம் அவரிடம் இல்லை. அது மட்டும் இருந்தால் அவரை எவருடனும் ஒப்பிடவே முடியாது.

மிகச் சிறந்த பங்களிப்பை அளித்தால் தனிப்பட்ட வாழ்க்கையில் அவர் எப்படி இருந்தாலும் கவலையில்லை. அவருடைய செய்கையால் இளம் வீரர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது.

அணியின் தேவைக்கு ஏற்ப, ஒழுக்கத்துடன் விளையாட வேண்டும். இந்த நிலையில் நான் வேறு என்ன செய்ய முடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் இன்சமாம்.

## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப் போவதில்லை •

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# கிழக்கில் முஸ்லிம் பகுதியில் புத்தர் சிலைகள் அமைச்சர் ஹக்கீம் கடும் ஆட்சேபம்

### -இனமோதல்கள் வெடிக்கலாம் எனவும் எச்சரிக்கை

கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஆங்காங்கே புத்தரின் சிலைகள் நிறுவப்பட்டு வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறு புத்தரின் சிலையை முஸ்லிம் பகுதிகளில் பொது இடங்களில் அமைப்பதை சிறிலங்கா அரசு உடனடியாக நிறுத்தா விட்டால், அங்கே இன மோதல்கள் வெடிக்கும் அபாயம் எழுந்துள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார். பொத்துவில் பகுதிகளில் சில புத்தர் சிலைகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், முஸ்லிம் கிராமங்களின் நுழைவாயில் பகுதிகளில் பௌத்த மத சிலைகளை நிறுவுவதன் உள் நோக்கம் சந்தேகத்தை எழுப்புவதாகவும் தெரிவித்தார். ஆழிப்பேரலையின் பாதிப்பின் பின்னர், புதிதாக மீண்டும் கிழக்கில் புனரமைக்கப்படும் கிராமங்களில், தற்காலிக வீடுகளுக்கு அடிக்கல் நாட்டுவதற்கு முன்னரே புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளதை தான் நேரில் பார்த்ததாகவும் கூறினார். தமிழர்களும் முஸ்லிம்களும் மட்டுமே வாழ்ந்த பகுதிகள் ஆழிப்பேரலையால் அழிக்கப்பட்ட பின்னர், புனரமைப்பின்போது முதலில் புத்தர்சிலையை நிறுவுவது, சமாதான முயற்சிகளைப் பாதிப்பதுடன் இதன் மூலம் உருவாகும் தேசியப் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தலுக்கும் காரணமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான நடராஜா ரவிராஜ், குடக்களி உட்பட பல தமிழ் மக்களது பகுதிகளில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளதை பாராளுமன்றத்தில் ஏற்கனவே சுட்டிக் காட்டியபோது, உரிய விவாத நேரத்தில் இவ்விடயம் கொண்டு வரப்படவில்லை என்று சபாநாயகர் உதாசீனம் செய்தது தவறு என்றும், இவ்விடயத்தை மீண்டும் விவாதத்திற்கு எடுப்பது அவசியம் என்றும் ஹக்கீம் மேலும் கேட்டுக் கொண்டார்.

### வவுனியா நெளுக்குளத்தில்

# தனியார் தொலைத் தொடர்பு நிலையத்தில் பணம் பறிக்க முயன்றோர் கைது

வவுனியா நெளுக்குளம் பகுதியில் இயங்கி வந்த தனியார் தொலைத் தொடர்பு நிலையத்தில் பணம் பறிக்க முயன்ற மூன்று பேரையும் பொலிசார் நேற்றுக் கைது செய்துள்ள னர். கடந்த 21ஆம் திகதி தனியார் மையத்திற்கு வந்த இனம் தெரியாத நபர்கள் கைத்துப்பாக்கியைக் காட்டி 5 இலட்சம் ரூபா பணம் கோரியதோடு தராத பட்சத்தில் கடையின் உரிமையாளர் தம்மால் சுடப்படுவார் என்றும் ஒருவாரத்தினுள் பணம் தர வேண்டும் என்றும் மிரட்டியுள்ளனர். அவர்கள் சென்றதன் பின்னர் கடையின் உரிமையார் பொலிசாரிடம் இது சம்பந்தமாக முறைப்பாடு ஒன்றினை செய்திருந்தார். அன்று முதல் மேற்படி கடைக்கு அருகாமையில் சாதாரண உடையில் பொலிசார் கடமையில் இருந்துள்ளனர். நேற்று முன்தினம் மேற்படி கடையுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மேற்படி நபர்கள் பணம் கோரியுள்ளனர். எனினும் கடையின் உரிமையாளர் ஐந்து இலட்சம் ரூபா தர முடியாது என்றும ஒரு லட்சம் தருவதாகவும் தெரிவித்துள்ளர். நேற்று முன்தினம் மாலை மீண்டும் வவுனியா பொலிசாருக்கு அவர் முறைப்பாடு செய்துள்ளார். நேற்று பொலிசார் சாதாரண உடையில் நின்ற போது இரண்டு பெண்களும் ஒரு ஆணும் அந்தக் கடைக்கு சென்று பணம் பெறும் போது அவர்களைக்கையும் களவுமாகப் பிடித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 15 வயதுப் பெண் ஒருவரும் அடங்குவார். இவர்களில் இருவர் கண்டிப் பகுதியையும் ஒருவர் கொழும்பையும் சேர்ந்தவர். இவர்களிடம் இருந்து மூன்று கையடக்கத் தொலைபேசிகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி தெரிவித்தார். (21)

# கொழும்பில் கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினால் கடும் நடவடிக்கை

### -கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு இசுறுபாய கல்வி அமைச்சின் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எச்.எல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு பின்னணியில் அரசியல்கட்சி ஒன்று செயற்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் இனி நடைபெறுவதற்கு கல்வி அமைச்சு எக்காரணம் கொண்டும் இடம் கொடுக்காது எனக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# நீதிமன்ற தாக்குதல் தொடர்பில் கொழும்பில் இருவர் கைது

எம்பிலிபிட்டிய நீதிமன்றத்தில் தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என பொலிசார் தெரிவித்துள்ளனர். காலி-கொழும்பு வீதியில் பயணம் செய்து கொண்டிருக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் எம்பிலிபிட்டிய நீதிமன்ற கட்டடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐவர் உயிரிழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

# ஏப்ரலில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர ஐ.தே.க முடிவு

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் ஆளும் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளதாக எதிர்க் கட்சி அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடிய பின்னர் அவ்வாரத்தில் ஒருநாள் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லுதல், பலவந்தமாக சர்வசன வாக்கெடுப்பை மக்கள் மீது திணித்தல் ஆகிய விடயங்களை முன் வைத்தே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளதாக நியோமல் பெரேரா கூறியுள்ளார்.

# சுனாமியின் போது கடலினுள் சென்ற பொருட்கள் மீண்டும் கரை ஒதுங்கின

சுனாமி அனர்த்தத்தின் போது கடலுக்குள் அள்ளிச்செல்லப்பட்ட வீட்டுத்தளபாடங்கள், உபகரணங்களும் ஏனைய பொருட்களும் மீண்டும் கடற்கரையில் ஒதுக்கப்பட்ட சம்பவம் காலிமாவட்டம் அவுன்கள்ள பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி பேரலைகளின் போது அவுன்கள்ள பிரதேசத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டு அப்பிரதேச மக்களின் வீட்டு உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் கடல் அலையால் இழுத்துச்செல்லப்பட்டது. ஆனால் இம்மாதம் 25 ஆம் திகதி மீண்டும் கடல் அலைகள் அப்பிரதேசத்தில் எழுந்தபோது அடித்துச்செல்லப்பட்ட யன்னல்கள், கதவுகள் ஏனைய வீட்டுப்பொருட்கள், உடைந்த படகுகள், ஈருருளிகள்,உந்துருளிகள் மற்றும் ஏனைய பொருட்கள் அவுன்கள கடற்கரையில் காணப்படுகின்றது. பெருந்தொகையான அப்பிரதேச வாசிகள் அவற்றைப் பாவனைக்காக எடுத்து வருகின்றனர்.

# சுனாமியால் மகிழ்வோர்..!

சுனாமிப் பேரலைகள் தாக்கி இலங்கையில் பேரழிவை ஏற்படுத்தியதையிட்டு ஆளும் மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி அரசாங்கம் பெரும் மகிழ்ச்சி கொண்டுள்ளது போல் தெரிகின்றது. அதிலும் குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இதுகுறித்துப் பூரண திருப்தி அடைந்துள்ளதாகத் தெரிகிறது.

ஏனெனில் சுனாமிப் பேரலைகள் தாக்கியமையானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் அனுதாபம், ஆதரவு கிடைப்பதற்கு வழி ஏற்படுத்தியது மட்டுமல்ல, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மீது இனப்பிரச்சினை குறித்து சர்வதேச சமூகம் கொடுத்து வந்த நிர்ப்பந்தமும் தளர்வு காணக் காரணமாகியது.

அதாவது சுனாமிக்கு முன்னரான காலத்தில் குறிப்பாக டிச.26ஆம் திகதிக்கு முன்னரான காலத்தில் யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் குறித்துப் பலமான கேள்வி எழுந்திருந்தது. கடந்த மாவீரர் தின உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் பொறுமையின் எல்லைக்குப் புலிகள் வந்து விட்டதாகவும், சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பான விடயத்தில் அரசாங்கம் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தையும் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்நிலையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக உறுதியான நிலைப்பாடு ஒன்றை சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு வெளிப்படுத்த வேண்டியதாக இருந்தது இன்னொருபுறம் சர்வதேச சமூகமும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென வற்புறுத்தத் தொடங்கியிருந்தது.

ஒருவகையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான நிலைப்பாட்டிற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு இருந்தது என்பதும் வெளிப்படையாக இருந்தது என்றே கூறலாம். ஆகையினால் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்பதை அரசாங்கம் இலகுவில் நிராகரித்துவிட முடியாததொரு நிலையே காணப்பட்டது.

ஆனால் ஆளும் கூட்டணிக்குள் இது தொடர்பாக இணக்கப்படானதொருநிலையை ஏற்படுத்த சனாதிபதி சந்திரிகாவினால் முடியவில்லை. இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமேயானால் கட்சியை விட்டு விலகவும் ஆட்சியைக் கவிழ்க்கவும் தயங்கப்போவதில்லை என்று ஜே.வி.பி தொடர்ந்தும் மிரட்டிய வண்ணமே இருந்தது.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் தீர்மானம் எடுக்கமுடியாத நிலையிலும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பிரச்சினைகளைத் திசை திருப்பி விடவும் முடியாததொரு அனுகூலமற்ற/இக்கட்டான நிலையில் இருந்தது. இவ்வேளையில்தான் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்திற்கு பேருதவி புரிவது போன்று - சுனாமி இலங்கையைத் தாக்கியது.

சுனாமியின் தாக்கத்தினால் ஒட்டுமொத்தமாகவே அரசியல் சூழ்நிலை மாற்றம் அடைந்தது. இனப்பிரச்சினைத்தீர்விற்கு முன்னதாக- யுத்த புனர்வாழ்வு , புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு முன்னதாக- சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட/பேரழிவைச் சந்தித்த மக்களுக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாணப்பணிகள் அவசியமாயின. இனப்பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு முன்பாகப் பேசப்படவேண்டிய / தீர்க்கப்படவேண்டிய விவகாரமாக/ நெருக்கடியாக அது இருந்தது.

இந்நிலையானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்திற்குப் பெரும் வாய்ப்பாக தற்பொழுது அமைந்து விட்டதுபோலுள்ளது. ஏனெனில், இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் இப்போதைக்கு ஆரம்பிக்க முடியாததொரு சூழ்நிலை நிலவுகின்றது எனக் கூறிக்கொள்ள அவர்களுக்கு இது வாய்ப்பைக் கொடுத்துள்ளது.

அவ்வாறு இல்லாது விட்டால் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மைக்காலத்தில் ஒன்றிற்கு இரண்டு தடவை "தற்பொழுது அரசாங்கத்திற்கும்- விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடனடிச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இடமில்லை" எனக் கூறியிருக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்க மாட்டாது.

சுனாமி தாக்கியதன் பின்னர் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு முன்பாக சுனாமி அனர்த்த புனர்வாழ்வு நடவடிக்கைகள் முதன்மைப்படுத்தப் படவேண்டும் என்றும்- சுனாமி அனர்த்த மீள்கட்டுமானத்திற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் எனவும் , அதற்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விடயத்திற்கும் தொடர்பு இல்லையென விடுதலைப்புலிகள் கூறியிருந்தனர் என்பதும் வெளிப்படையானதே.

ஆனால் கதிர்காமர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விவகாரமே தற்போதைக்குத் தேவையற்றது என்பது போல் பேசுவது- இடைக்கால நிர்வாகம் குறித்து இனி அரசாங்கம் அக்கறைகாட்டத் தேவையில்லை என்பது போலுள்ளது. ஆனால் , இது இலங்கையின் எதிர் காலத்திற்கு நல்லதல்ல. என்பதோடு, இலங்கையின் அமைதிக்கு ஊறுவிளைவிக்கத்தக்கது.

இத்தாவில் அரும்பொருள் காட்சி மண்டபத்திறப்பு விழாவில்...







-பல்கலை நிர்வாகத்தின் முடிவுக்கெதிராக-

# யாழ். பல்கலை ஊழியர் சங்கத்தினர் சுலோகங்களை தாங்கியவாறு போராட்டம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங் கத்தினர் நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ். பல்கலைக் கழக வளாகத்தினுள் சுலோகங்கள் தாங்கியவாறு போராட்டம் நடத்தினர்.

இது தொடர்பாக பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவரிடம் தொடர்பு கொண்டபோது, "இடை நிறுத்தப்பட்ட பதிவாளரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதென பல் கலைக்கழக நிர்வாகத்தினர் தீர்மானம் எடுத்திருப்பதால் அதன் நியாயப்பாட்டை யாழ். பல்கலைக் கழக பேரவையின் மிக நீண்ட அனுபவமுடைய கல்விமான்கள், சர்வதேச மாணவர் பேரவையின் இணைப்பாளர் ஆகியோர் முன்னிலையில் விளக்க வேண்டும் என்று துணைவேந்தரை பல் கலைக்கழக ஊழியர் சங்கம் கடந்த ஒரு மாதகாலமாக கோரிவருகின்றது.

இதனிடையே நேற்று முன்தினம் சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் முன்னிலையில் துணைவேந்தர் சில உறுதி மொழிகளை வழங்கியுள்ளார். இருந்த போதும் இன்று நடைபெறுகின்ற பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தில் பாதகமான முடிவுகள் எடுக்கப்படாமல் இருக்க வேண்டும்




என்பதை வலியுறுத்தவே இன்றைய போராட்டம் என்று பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்.

இடை நிறுத்தப்பட்ட பதிவாளரை மீண்டும் கடமையில் ஈடுபடுத்துவது தொடர்பான நியாயப்பாட்டை பல் கலைக்கழக பேரவையின் நீண்ட கால அனுபவமுள்ள கல்விமான்கள் மற்றும் சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் முன்னிலையில் விளக் கும் படி கோரி கடந்த வியாழக்கிழ மையில் இருந்து பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (சு)

-மட்டு, அம்பாறை மாவட்டங்களில்-

# புலிகள் மீதான தாக்குதல் குறித்து விசாரணைகள் நாளை ஆரம்பம்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் பின்னணி பற்றி ஆராயவென நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை நாளை முதல் ஆரம்பமாகின்றது. ஐந்து நாட்கள் அம்பாறையிலும் எதிர்வரும் நான்காம் திகதி முதல் ஐந்து நாட்கள் மட்டக்களப்பிலும் விசாரணைகள் நடைபெறவுள்ளன. ஆணைக் குழுவின் தலைவராக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதனும், உறுப்பினராக அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. டீ.எம்.பி பேரபெரவும் செயலாளராக அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.எம்.கலிலும் சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆணைக் குழுவில் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கும் மார்ச் மாதம் இரண் டாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

# யுத்த நிறுத்த காலத்தில் புதிதாக இராணுவத்தில் 10.000 பேர் சேர்ப்பு

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இதுவரை சிறிலங்கா இராணுவத்தில் சுமார் பத்தாயிரம் பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இராணுவச் சிப்பாய்களாகவும் படை அதிகாரிகளாகவும் இவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வருடத்திற்கு இருதடவைகள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும் ஒருதடவைக்கு 1,500 முதல் 2,000 பேர்வரை படைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் வருடத்திற்கு இருதடவைகள் புதிய அதிகாரிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தமிழீழ....

துள்ளார்.

இந்த ஒளிபரப்பு நேரம் ஒன்றரை மணிநேரம் அதிகரிக்கப்படவுள்ளது அத்துடன் விரைவில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழீழத் தேசிய தொலைக்காட்சியின் ஒளிபரப்பு சேவை விரிவுபடுத்தப்படவுள்ளது.

ஆங்கிலத்தில் என்ரிரி என்ற சுருக்கப்பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழீழ தேசியத் தொலைக் காட்சியின் இலச்சினை தமிழீழத் தேசியப் பூவான கார்த்திகைப் பூவை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## இலவச....

மாவட்ட துணைத் தளபதி காதர் ஏற்றிவைத்தார்.

அடுத்து கணனிப் பயிற்சி நிலையத்தை கடற்படை அரசியல் பிரிவுமகளிர் பொறுப்பாளர் பூரணி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கணனிகள் இயங்க வைக்கப்பட்டன.

அடுத்து இடம்பெற்ற நிகழ்வில் உரைகளை தமிழீழ கடற்படையின் வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன், மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர்களான மைக்கல் அஞ்சலோ, தயாநந்தன் உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் அரியகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (லோ)

## மாவீரர்..

மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், திருமலை மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை, தமிழீழ கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ரமேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் முதற் கட்டமாக 90 மாவீரர் குடும்பங்களுக்கு சுயசார்பு ஊக்குவிப்பு வழங்குவதற்கான ஆரம்ப சந்திப்பு நேற்று நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

-வடக்கு கிழக்குப் பிரதேச-

# சமுர்த்தி உத்தியோகத்தர் வெற்றிடங்கள் நிரப்பப்படா விட்டால் போராட்டம்

வடக்கு கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் வெற்றிடங்கள் நிரப்பப்படாவிட்டால் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது வன்னிப் பிராந்தியத்தில் மாத்திரம் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு 103 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அவற்றை நிரப்புவதன் மூலமே பிராந்தியத்தில் சமுர்த்தி நடவடிக்கைகள் உரிய முறையில் மக்களை சென்றடைய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## இத்தாவில்...

படத்திற்கு கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் பசுபதிப்பிள்ளை சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்க, மலர் வணக்கத்தினை பளைக் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்தனா ஆரம்பித்து வைத்தார். அடுத்து அரும் பொருள் காட்சி மண்டப நினைவுக் கல்வெட்டுக்களை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வடபோர் முனை கட்டளைத் தளபதிகளில் ஒருவரான ஜெரி ஆகியோர் திரை நீக்கம் செய்து வைக்க, மண்டபத்தினை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து தளபதிகள் பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்கள் அனைவரும் மண்டபத்தினைப் பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து தமிழீழ அரும் பொருள் காப்பகப் பொறுப்பாளர் ஆதித்தவர்மன் தலைமையில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் நினைவுரைகளை யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளரும், பளை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் நிகழ்த்த, சிறப்புரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் நிகழ்த்தினார். தொடர்ந்து அரும் பொருள் காட்சி மண்டபத்தினை கலை அம்சத்துடன் வடிவமைத்த செல்வரத்தினம் அவர்களுக்கு நினைவுப் பரிசினை கேணல்.தீபன் வழங்கி கௌரவிக்க, கருங்கல் வடிவமைப்பினை உருவாக்கிய ஆனந்தன் அவர்களுக்கு வடபோர் முனை கட்டளைத் தளபதிகளில் ஒருவரான ஜெரி பரிசில் வழங்கினார். தொடர்ந்து இம் மண்டபத்தினை அமைக்க ஒத்துழைப்பு வழங்கிய பளைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளருக்கு தமிழீழ நீதி நிர்வாகத்துறை பொறுப்பாளர் பரா அவர்கள் பரிசிலை வழங்கி கௌரவித்தார். (ச)

## இராணுவ....

கள் குறித்து சட்ட ஆலோசகர் கேட்ட போது மேற்கண்டவாறு குயிலின்பன் விளக்கமளித்துள்ளார். சமாதானம் என்று கூறிக்கொண்டு தமது முகாம்களையும் காவலரண்களையும் சிறிலங்காப் படையினர் விஸ்தரித்து வரும் செயலானது மக்கள் மத்தியிலே போர் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது. அப்படியானதோர் போர் மீண்டும் எம்மக்கள் மீது திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் தயார். சில சந்தர்ப்பங்களில் படையினர் எமது போராளிகளையும், ஆதரவாளர்களயையும் சீண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்றும் குயிலின்பன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவிகளும் இல்லாமலிருந்தால் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்திருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## சுனாமி....

துள்ளார். இதனால் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில் இடம் பெயர்ந்தோர் சிரமங்களை எதிர்நோக்குவதோடு தொடர்ந்தும் நிவாரணங்களிலே தங்கியிருக்கவேண்டிய நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்படுவதற்கு அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்த கட்டமைப்பு ஒன்றை அமைப்பது முக்கியமானது என அவர் தெரிவித்தார்.

இவற்றை துரிதாமாக ஆரம்பிப்பதற்கு சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்த வேண்டுமென இலங்கை அரசாங்கத்திற்கு தாங்கள் வலியுறுத்தியதாகவும் தெரிவித்த அவர் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குமிடையில் இணைந்த கட்டமைப்பு ஒன்றை உடனடியாக அமுலுக்கு கொண்டு வருகின்றமை முக்கியமானது என நாங்கள் கருதுகின்றோம். இவ்வாறு செய்யாவிட்டால் புனர்நிர்மாணப் பணிகள் இன்னும் தாமதமடையும். இதனால் இடம் பெயர்ந்தோர் தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படும். இன்னுமொரு விடயம் சுனாமியினால் இடம்பெயர்ந்தோர் தொடர்பாக எல்லோரும் கவனம் செலுத்தி வருகின்றனர், வேறு காரணங்களினாலும் இடம் பெயர்ந்தோர் இந்த நாட்டில் உள்ளனர். இவர்களையும் மறக்கக் கூடாது. அதேபோன்று சமாதானப் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதும் முக்கியமானதாகும். இதற்கு ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உதவியும் கிடைக்குமென வும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது